விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை (07.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 170

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கு அரசியல்வாதிகள் முன்வைக்கும் புலிகளின் கோரிக்கைக்கு தீர்வு இல்லை

## ஜனாதிபதி கொக்காவிலில் தெரிவிப்பு



(கொக்காவில்)

வடக்கு அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்படும் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

கொக்காவில் தொலைத்தொடர்பு நிலைய திறப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் தெற்கு அரசியல் தலைவர்களினால் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே வடக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை இராணுவ ஆட்சிக்கு அரசு கொண்டு செல்கிறது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசு இந்த நாட்டை இராணுவ ஆட்சிக்கு கொண்டு நகர்த்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் காரணமாக உயிரிழந்த ரொசான் சானகவின் இறுதிக்கிரியைகள் கூட இராணுவ கட்டுப்பாட்டுக்குள் நடந்ததாகவும் இறுதிக்கிரியை நடைபெற்ற தேவாலய சுற்றுவட்டாரத்தில் 56 இராணுவ வீரர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

இறுதி கிரியைகள் நடைபெறும் போது தேவாலய வளாகத்தினுள் ஆயுதத்துடன் இராணுவத்தினர் பிரசன்னமாகி (20ஆம் பக்கம் பார்க்க)



கொக்காவில் நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொண்டபோது...

# ஜனாதிபதி செய்ய முடியாததை உறவினர்களிடம் கையளிப்பார்

## அமைச்சர் டளஸ் பெருமிதம்

(வவுனியா)

ஜனாதிபதியிடம் விசேட தன்மைகள் உள்ளன. எந்தச் செயற்பாட்டை எடுத்துக்கொண்டாலும் சிறந்த முறையிலும் உணர்ச்சிபூர்வமாகவும் செய்யவேண்டும் என விரும்புவார். ஆனால் எந்த விடயத்தை தான் செய்வார் அல்லது உறவினர்களிடம் அந்தப் பொறுப்பை வழங்குவார் என இளைஞர் விவகாரத் திறன் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப்புலிகளின் பேராளிகளை விடுவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ், சிங்கள மக்கள் ஏன் பிரிந்து வாழ முடியாது என அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியிருந்தார். கணவனும் மனைவியும் பிரிவதுபோல் பிரிந்துவிடலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார். கணவன், மனைவி பிரியலாம். ஆனால் தமிழர்களும், சிங்களவர்களும் சகோதரர்கள் என்பதால் அவர்கள் பிரிய முடியாது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா வழக்கை அவதானிக்க மார்க்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக் கொடி வழக்கு விசாரணையை அவதானிப்பதற்காக அனைத்து நாடாளுமன்றங்களின் சங்கத்தைச் சேர்ந்த இராணி வழக்கறிஞரும் (20ஆம் பக்கம் பார்க்க)

## நாளை...

ஆசிரியர் புன்னியாமீனின் தரம் 5 புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

# தடையை நீக்கக் கோரி ஐரோ. நீதிமன்றில் வழக்கு

## புலிகள் சார்பில் தாக்கல்

(அம்ஸ்ரடாம்)

ஐரோப்பிய ஒன்றியத்தால் விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி புலிகளின் சார்பில் அம்ஸ்ரடாமில் இயங்கும் பொஹ்லர் குரூப்பின் சட்டத்தரணி விக்ரர் கொப்பே ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல்செய்துள்ளார்.

வன்னி யுத்தத்தின் பின்னர் விடுதலைப்புலிகள் இயக்கம் தமது இலக்குகளை அடைவதற்காக இராணுவ வழிமுறைகள் எதையும் பயன்படுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டியிருக்கும் சட்டத்தரணி கடந்த இரண்டு ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியான வழிகளைக் கைவிட்டு அரசியல் ரீதியிலேயே போராடி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தமிழர்களுக்கான நீதியான போராட்டத்தில் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவே அவர்கள் தொடர்ந்தும் போராடி வருகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி வழக்கானது சென்ற மாதத் தொடக்கத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

# சூழ்ச்சியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா ஊழியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை பயன்படுத்தி தொழிலாளர்கள் அல்லாத குண்டர்களைப் பயன்படுத்தி பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அந்தத் தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அரசாங்கத்திற்கு எதிரான சூழ்ச்சிக்காரர்களுக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் பின்நிற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தேர்தல்களில் மக்கள் ஆணையைப் பெற்றார். யுத்தம் நிறைவடைந்தன் பின்னர் மிக வேகமாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தியை சீர்குலைப்பதற்கு ஜே.வி.பி. முயற்சிக்கின்றமை தெளிவாகின்றது என்றும் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர்பேராசிரியர் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)



# சரிந்த நிலையில் மின்கம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் செல்வநாக பூசணி அம்மன் ஆலயத்திற்கு மிக அருகாமையில் உள்ள மின்கம்பம் நீண்டகாலமாக சரிந்த நிலையில் ஆபத்தை விளைவிக்ககூடியதாக காணப்படுகின்றது. இது குறித்து உரிய தரப்பினரிடம் பலமுறை ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வாலயத்தின் வருடாந்த தேர் உற்சவத்தின்போது இம்மின்கம்பத்தால் இடையூறு ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ் ஆலய மகோற்சவம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) மஹா கும்பாபிஷேகக் காட்சிகள் சில...


யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
தொண்ணூறாவது ஆண்டு விழா
யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான
**உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி**
இடம் : கல்லூரி மைதானம்
காலம் : 2011 ஜூன் 7-செவ்வாய், 8-புதன்,
மு.ப. : 9.00 மணி
தலைவர்
திரு.செ.சேதுராஜா
அதிபர்
விசேட அதிதி
Dr.வே.கமலநாதன்
'நெல்லியடி கிளினிக்'
90th Year
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
'விழா ஏற்பாட்டுக்குழு'
அனுசரணை வழங்குவோர் :
நெல்லியடி கிளினிக்


# சிம்காட் விபரம் திரட்டிய 17 வயது சிறுவன் கைது

(கொழும்பு)

ஒரு பிரபலமான கையடக்கத் தொலைபேசி சேவை வழங்கும் கம்பனியொன்றின் வாடிக்கையாளர் பலரின் தனிப்பட்ட விடயங்களையும் சிம்காட் விபரங்களையும் கள்ளத்தனமாக பெற்று அவர்களை ஏமாற்றிய 17 வயது சிறுவன் ஒருவனை ஏமாற்று வேலைகள் புலனாய்வுப் பிரிவு கைது நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியது.

அளுத்கமையில் தொலைத் தொடர்பு நிறுவனமொன்றில் வேலை செய்ததாகக் கூறப்படும் இவர்,பல கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவர்களுக்கு சீட்டிழுப்பொன்றில் பெரிய தொலைக் காட்சிப் பெட்டியொன்று கிடைத்துள்ளதாகக் கூறி அவர்களின் சிம்காட் பற்றிய சகல விபரங்களையும் பெற்றுக் கொள்வார்.

இதன்பின் தனது தொலைபேசி தொலைந்துவிட்டதாக தொலைபேசி நிறுவனத்துக்கு அறிவிப்பார். கள்ளத்தனமாக பெற்றுக்கொண்ட விபரங்களை கூறி, தான் உண்மையான பாவனையாளரென தொலைபேசிக் கம்பனியை நம்பவைத்து விடுவார். சிம்கார்ட்டை தனது விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கம்பினியிடம் கேட்டுக்கொள்வார். தேசிய அடையாள அட்டை வைத்திருக்காத இவர் தனது வீட்டு விலாசத்திற்கு புதிய சிம் அட்டைகளை கொண்டுவரும் கூரியர்களை ஏமாற்றி சிம்காட்களை பெற்றுக் கொள்வார்.

இரகசிய நடவடிக்கைகள் பல மேற்கொண்டு பொலிஸார் இவரை கைது செய்தபோது, இவரிடம் களவாக பெறப்பட்ட பல சிம்காட்கள் இருந்தன. இந்த இலக்கங்களை இவர் தன்னிடம் இல்லாத வாகனங்களை விற்பதாக செய்த விளம்பரங்களில் பயன்படுத்தியிருப்பது பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர் ஒருவருடம் முழுவதும் இலவசமாக பேசமுடியும் எனக் கூறி அப்பாவிகளான தொலைபேசி பாவனையாளர்களை அவர்களின் தொலைபேசியில் 3500 ரூபாயை வைப்பிலிடச்செய்து பெற்றுக்கொண்ட விபரங்களைப் பயன்படுத்தி இந்த தொகையை வேறு தொலைபேசிகளுக்காக மாற்றியுள்ளார்.

நீதிமன்ற செயல்முறைக்கு மேலாக ஏமாற்று வேலைகள் பணியகமும் விசாரணைகளை மேற்கொள்கின்றது. (எ)


ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
**ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் 35வது திருக்கல்யாண தினம் லோக கல்யாண மஹோற்சவம்**
இடம் :- யாழ். இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம் (சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்)
காலம் :- 09.06.2011 வியாழக்கிழமை பி.ப. 02.30 மணி




திருமணம் வாழ்க்கையின் பல படிகளில் ஒரு முக்கிய நிகழ்வாகும். கணவன் மனைவியின் ஆன்மீக மலர்ச்சியே திருமணத்தின் மையக்கருத்தாகும் என வேதங்கள் கூறுகின்றன.
சர்வ மங்களகரம் பொருந்திய கடவுளின் கல்யாண தினமாகிய லோக கல்யாண நன்னாளில் பங்கேற்கும் அனைவர்க்கும் ஸ்ரீ அம்மா பகவான்சகல சௌபாக்கியங்களையும் அருளுகின்றனர்.
★குடும்பம், கிராமம், ஊர், தேசம், உலகமே சுபீட்சமடையும்.
★திருமண பாக்கியம், மாங்கல்யம் நிலைபெற, புத்திரபாக்கியம், ஐஸ்வர்ஜம் முதலாய வாழ்க்கையில் பெறுதற்கரிய பதினாறு செல்வங்களும் பெறுவர்.
எனவே இன, மத, பேதமின்றி இவ் வைபவத்தில் கலந்து ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்ரகத்தைப் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
'அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'
'லோகா சமஸ்தா சுகினோபவந்து'
ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம், யாழ். மாவட்டம்



வடமராட்சியில்
**றபர் சீல்**
Rubber Stamps



24 மணி நேரத்தில் தயார் செய்து தரப்படும்.
அவசர சேவைகள் 3 மணி நேரத்தில்
**தூரிகை** பொன்கந்தையா வீதி, நெல்லியடி.
(C-3399)


## மரண அறிவித்தல்

### செல்வி வேலன் தாட்சாயினி



வளர்மதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வேலன் தாட்சாயினி 06.06.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வேலன்-ஈஸ்வரியின் அன்பு மகளும், சுதன், மதன், ரதன், கஜன், தயிசன் ஆகியோரின் சகோதரியும், கி.கமல்(ஜெகன்), அ.ஆனந்தராசா (அரசன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் அ.இலட்சுமி, கி.சரஸ்வதி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி
கரவெட்டி கிழக்கு,கரவெட்டி.
T.P.:0779057793 (C-3413)

தகவல்:
குடும்பத்தினர்


ஆடைகளின் அதிநவீன சோலை



**ஸ்ரைல் பார்க்**



உங்கள் எண்ணங்கள் எங்களிடம்....
புத்தம்புதிய அழகிய டிசையின்களில் வடிவமைக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடைகளிற்கு நாடவேண்டிய ஒரே இடம்
STYLE PARK
171, K.K.S,ROAD, JAFFNA.



# இன்று ஒரு தகவல்

## அறிவாற்றல்

ஓர் அரசன்,ஒரு சேவகன் ஆகிய இருவரும் குதிரைகளில் வந்து கொண்டிருந்தனர். நீண்டதூரம் வந்து விட்டனர். அரசனுக்குத் தாகம் எடுத்தது... "தண்ணீர் எங்கே கிடைக்கும்?" என்று பார்த்தார்கள்.

பக்கத்தில் வீடு எதுவும் தென்படவில்லை. கொஞ்ச தூரத்தில் ஒரு வெள்ளரிப்பழம் இருப்பது தெரிந்தது.

"அதோ, அங்கே ஒரு வெள்ளரிப்பழம் உள்ளது. அதையாவது சாப்பிடலாம்!" என்று மன்னன் கூறினான். உடனே சேவகன் பறித்து வரப் புறப்பட்டான்.

அப்போது, "அது வெள்ளரிப்பழம் இல்லை!" என்று ஒரு குரல் கேட்டது. "யார் அது?" என்று அவர்களிருவரும் திரும்பிப் பார்த்தனர்.

ஒரு பார்வையில்லாத பிச்சைக்காரன்... பக்கத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தான். அவன்தான் குரல் கொடுத்தான்.

அரசன் பார்த்தான்: "இவனுக்கோ பார்வை இல்லை... இவனுக்கு எப்படி அது வெள்ளரிப்பழமா அல்லது இல்லையா என்று தெரியும்? நீ போய் பறித்துக் கொண்டு வா... இவன் ஏதோ தெரியாமல் சொல்கிறான்" என்றான்.

சேவகன் பறித்துக் கொண்டு வந்தான். மன்னன் அதை வாங்கிச் சாப்பிட்டான். வாயில் வைக்க முடியவில்லை! ஒரே கசப்பு!

அவனுக்கு ஆச்சரியம். அதற்கு பிச்சைக்காரன், "ஐயா... இது நாலு பேர் வந்து போகிற இடம்...அது வெள்ளரிப்பழமாக இருந்திருந்தால்...வருகிறவர்கள் இவ்வளவு காலம், அதை விட்டு வைத்திருக்கமாட்டார்கள்! அதனால்தான் அது வெள்ளரிப்பழமாக இருக்க முடியாது என்று நினைத்தேன்!" என்று தெரிவித்தான்.

அடுத்தபடியாகத் தண்ணீருக்கு என்ன செய்யலாம் என்று மன்னன் யோசனை செய்தான்.

சேவகன், "அரசே! இங்கிருந்து நாலு பக்கமும் சாலை போகிறது... நான் இப்படியே... கிழக்கே போகும் இந்தப் பாதை வழியாகப் போய்ப் பார்க்கிறேன். அங்கே ஏதாவது நீர் நிலைகள் இருக்கும்... தண்ணீர் எடுத்து வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

இப்போதும் அந்தப் பார்வையில்லாத பிச்சைக்காரன். "ஐயா... கிழக்கே சென்றீர்களானால் தண்ணீர் கிடைக்காது... தெற்கே போகும் பாதையில் சென்றால் தண்ணீர் கிடைக்கும்!" என்றான்.

அவன் சொன்னது போலவே தெற்கே சிறிது தூரம் சென்று பார்த்த போது, அங்கு ஒரு பெரிய குளம் இருந்தது. "இது எப்படித் தெரியும் உனக்கு?" என்று மன்னன் பிச்சைக்காரனிடம் கேட்டான்.

"ஐயா... எனக்குப் பாருங்கள் உடம்பில் சட்டை இல்லை... தெற்கே இருந்து வரும் காற்று குளிர்ச்சியாக இருந்தது... அதனால் அங்கே தண்ணீர் இருக்கும் என்று நினைத்தேன்!" என்றான் பிச்சைக்காரன்.

அரசன் இப்படிப்பட்ட ஒரு ஆள் நமது அரண்மனையில் இருந்தால் உபயோகமாக இருக்கும் என்று நினைத்து பிச்சைக்காரனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று விட்டான்.

தினமும் ஒரு பொட்டலம் சாம்பார் சாதம் கொடுக்குமாறு அரசன் உத்தரவிட்டான்.

அப்படியே நடந்தது.

அந்த அரண்மனைக்கு ஒருநாள் வைர வியாபாரி ஒருவன் வந்தான். மன்னன் அவனிடமிருந்த வைரத்தையெல்லாம் வாங்கி பிச்சைக்காரனிடம் கொடுத்து சோதிக்கச் சொன்னான்.

இவன் வாங்கி...கையாலேயே சோதித்து பார்த்து அதையெல்லாம் இரண்டு பிரிவாக பிரித்து விட்டான்! இடது பக்கம் இருப்பதெல்லாம் வைரம்... வலது பக்கம் இருப்தெல்லாம் கண்ணாடிக் கல் என்று கூறினான்.

"எப்படிக் கண்டுபிடித்தாய்? என்று மன்னன் கேட்டான்.

ஒவ்வொரு கல்லையும் எடுத்து கையில் மூடி வைத்திருந்து பார்த்தேன். நமது உடம்பிலுள்ள சூடு கல்லில் ஏறினால் அது வைரம்... ஏறிவில்லையென்றால் அது கண்ணாடி... என்று கூறினான்.

அரசனுக்கு ஆச்சரியம்!

அவன், "சரி... இன்று முதல் தினம் ஒரு பொட்டலம் தயிர் சாதம் கொடுங்கள்!" என்று உத்தரவு போட்டான். அப்படியே நடந்தது.

ஒருநாள் அந்த மன்னன் அவனிடம். "எல்லோரும் என்னை பிச்சைக்கார ராஜா என்கிறார்களே!" என்றான்.

அது உண்மைதான். நீ நிஜமாகவே அப்படித்தான் இருக்க வேண்டும்! என்றான் இவன்.

"எப்படிச் சொல்கிறாய்?"

"நீ உண்மையிலேயே பரம்பரை ராஜவம்சமாக இருந்திருந்தால், ஆரம்பத்தில்... 'அது வெள்ளரிப்பழம் இல்லை என்று நான் சொன்னபோதே உன் கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றிப் பரிசாகக் கொடுத்திருப்பாய்... அதுமட்டுமல்ல... ஒரு பொட்டலம் சாம்பார் சாதம்... ஒரு பொட்டலம் தயிர் சாதம்..இப்படி எந்த ராஜாவும் கொடுக்கமாட்டார்" என்றான்

அதன் பின்புதான் அந்த ராஜா, ஐயா! நான் பரம்பரை ராஜா இல்லை... உன்னைப் போல் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவன் தான்... இந்த நாட்டு வழக்கப்படி அரண்மனை யானை என் கழுத்தில் மாலையைப் போட்டு விட்டது... அதனால் நான் ராஜாவாக ஆகிவிட்டேன்! அவ்வளவுதான்! என்று உண்மையைக் கூறினான்.

பார்வை இல்லாவிட்டாலும், நுண்ணறிவு எந்த அளவுக்கு பார்வையாக இருந்து பயன்படுகிறது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமத்திய, கிழக்கின் அபிவிருத்திக்கு உலக வங்கி மேலதிக நிதியுதவி

(கொழும்பு)

வடமத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் யுத்தத்தினால் மற்றும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள் கட்டுமான பண்களை மேற்கொள்ளவும் மக்கள் வாழ்வதற்கான சூழலைக் கட்டியெழுப்பவும் உலக வங்கி மேலதிகமாக 38 மில்லியன் டொலர் நிதியுதவியினை வழங்க அங்கீகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையில், கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மழையினால் சுமார் 1.2 மில்லியன் மக்கள் பாதிப்படைந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடுவடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் 3 இலட்சத்து 63 பேர் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ,அம்பாறை மற்றும் திருகோணமலை பிரதேசங்களை சேர்ந்த 94 சதவீதமானோர் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# மருதங்கேணி வீதியை மக்களின் பாவனைக்காக திறக்க கோரிக்கை

(அல்வாய்)

பருத்தித்துறையிலிருந்து நாகர் கோவிலூடாக செல்லும் மருதங்கேணி வீதியை எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பொது மக்களின் பாவனைக்கு திறந்து வைக்க உதவுமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவா னந்தாவிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருத்தித்துறை பகுதியிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பளையூடாக புதுக் காட்டுச்சந்திக்கு சென்றே மருதங்கேணி பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் பிரயாணத்துக்கு அதிக நேரம் செலவாவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் பருத்தித் துறை நாகர்கோவிலூடாக மருதங்கேணிப் பகுதிக்கு பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தினால் பயணத்தை மேற்கொள்வதில் இலகுவாக இருக்கும் என குறிப்பிடப்படுகிறது.

மேலும் மீளக் குடியேறிய பகுதியில் ஆசிரியர் தங்கக்கூடிய வீட்டு வசதிகள் குறைவாக இருப்பதனால் தினமும் வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்வதற்கு இவ்வீதி வசதியாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-19)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலைகளில் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்திட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆற்றல் விருத்திச் செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே யாழ்.வலயப் பாடசாலைகளில் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 25 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 60 |
| தக்காளி | 40 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | - | 100 | 60 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 55 | 50 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 30 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 100 | - |
| பயற்றங்காய் | 140 | 180 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 60 |
| பீற்றூட் | - | 60 | 80 |
| கறிமிளகாய் | 90 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 |
| போஞ்சி | - | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 15 | 50 | 20 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 30 |
| தேசிக்காய் | 140-150 | 150 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

*07.06.2011*
*(வைகாசி 24,செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*சஷ்டி முன்னிரவு 9.34 மணிவரை*
*ஆயிலியம் பிற்பகல் 1.57 மணிவரை*
*இராகுகாலம் 2.52-4.22 மணிவரை*
*சுபநேரம் 10.22-11.52 மணிவரை*
*சஷ்டி விரதம்*

**மேடம்** இல்லம் தேடி சுபசெய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், தொழில் நன்மை கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**இடபம்** தொலைபேசி வழித்தகவலால் ஆச்சரியப்படுவீர்கள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்,கந்தன் வழிபாடு காரிய வெற்றி தரும், உஷ்ண சம்பந்தமான ரோகம் ஏற்படலாம்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கடகம்** உங்களின் சிந்தனைக்கு பாராட்டு கிடைக்கலாம், சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடைகள் விலகும், வாக்கு மேன்மையுண்டு, தொழில் முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்** இறைவழிபாட்டில் நாட்டம் அதிகரிக்கும், குடும்ப பொறுப்புக்களால் செலவுகள் கூடும், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்கள் செய்ய வேண்டி வரலாம்.

**கன்னி** கணபதியை வழிபட்டு ஆனந்தங் காண வேண்டிய நாள், சில தேவைகளுக்காக சற்று அலைய வேண்டி வரலாம்,சுப செலவுகள் அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்** எதிர்பாராத வகையில் ஒருவர் உங்களுக்கு உதவ முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொருட்சேர்க்கையுண்டு, அம்பிகை வழிபாட்டால் ஆனந்தமடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** பூமியால் ஆதாயம் கிடைக்கலாம்,புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடுகள் அதிகரிக்கும், செய்தொழிலால் நன்மையுண்டு.

**மகரம்** உங்கள் செயற்பாடுகளில் பெரியோர் குறை கூறலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், திடீர் பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், குடும்ப பொறுப்புகள் கூடும்.

**மீனம்** பணவரவு திருப்தி தரும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், தொழிலை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

# பனைமரக்காடு திரைப்படம் தீபாவளியன்று திரையிடப்படும்

## தயாரிப்பாளர் செவ்வேள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனைமரக்காடு திரைப்படம் இலங்கையிலுள்ள சகல திரையரங்கிலும் தீபாவளியன்று திரையிடப்படவுள்ளதாக அப்படத்தின் தயாரிப்பாளரும் ஏஏஏமூவிஸ் நிறுவனத்தின் தலைவருமான க.செவ்வேள் தெரிவித்துள்ளார்.

யாழ்.மண்ணில் ஏஏஏமூவிஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பனைமரக்காடு திரைப்படத்தின் தற்போதைய நிலை தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பின்பொன்று நேற்று முன்தினம் ஏஏஏ மூவிஸ் நிறுவனத்தின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இத்திரைப்படமானது வெற்றிகரமாக தயாரிக்கப்பட்டு வருவதாகவும் திரைப்படத்தின் பாடல்கள் இசையமைப்பு பணி நிறைவுறும் தறுவாயிலுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஏழு நாட்கள் இந்தியாவில் பாடல் ஒளிப்பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து 40 நாட்கள் படப்பிடிப்பு இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஆவணி மாதம் 27 ஆம் திகதி இவ்வருடத்திற்கான குறும்பட விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது எனவும் அந் நிகழ்வில் பனைமரக்காடு படத்தின் பாடல்கள் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளதாகவும் தீபாவளியன்று இலங்கையிலுள்ள சகல திரையரங்கிலும் பனை மரக்காடு திரைப்படம் திரையிடப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வருடத்திற்கான குறும் படங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள பழைய கலைஞர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# வெள்ளை வானில் மாணவியை கடத்த முற்பட்ட சம்பவம்

## கொக்குவிலில் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளைவானில் மாணவியொருவரை கடத்த முற்பட்ட சம்பவம் ஒன்று நேற்று கொக்குவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் கொக்குவில் அம்மன் வீதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த மாணவி வழமை போல் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது இருவர் இந்த மாணவியை பின் தொடர்ந்துள்ளனர்.

இவர்கள் கறுப்பு துணியால் வாயை மறைத்து கட்டியவாறே மாணவியை பின் தொடர்ந்துள்ளனர்.

இவர்களின் பின் வெள்ளைவான் ஒன்று இருபக்க கதவுகளையும் திறந்த நிலையில் பின் தொடர்ந்து வந்துள்ளது.

குறித்த நபர்களின் நோக்கத்தையறிந்த மாணவி அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அருகிலிருந்த பாடசாலையொன்றிற்கு சென்று அதிபர், ஆசிரியர்களிடம் சம்பவம் தொடர்பாக முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து அப்பாடசாலையின் அதிபர் ஊடாக குறித்த மாணவி பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10இல் கல்வி கற்று வரும் மாணவியொருவரே இவ்வாறு கடத்த முற்பட்டவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவி தான் நடந்தே பாடசாலைக்கு சென்று வருவதாகவும் சில நாட்களுக்கு முன்பு வீதியோரத்தில் நின்று சிலர் தன்னைக் கடத்தப் போவதாக தெரிவித்ததாகவும் கூறினார். (ஸ்ரீ)

## யாழ். அரச அதிபரின் தலையீட்டால்

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோரின் தலையீட்டால் நேற்றுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

10 கோரிக்கைகளை முன்வைத்து இந்த அமைப்பினர் கடந்த 4 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களின் கோரிக்கைகளை நேற்றுக் காலை 7 மணியளவில் நேரில் சென்று கேட்டறிந்த யாழ். கட்டளைத் தளபதியின் பிரதிநிதி ஆகியோர் ஜனாதிபதியிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் இவ்விடயம் தொடர்பாக தெரிவிப்பதாகவும் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததோடு உண்ணாவிரதப் போராட்டத்தையும் முடிவுக்கு கொண்டு வந்தனர்.



உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட இந்த அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் வி.மகாதேவன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-6)

# பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் சபையால் நடத்தப்படும் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலைக்கான கட்டடத் திறப்பு விழா நிகழ்வு யோகசுவாமிகளின் பிரதம சீடரான மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு சபைத் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை தலைவரும் பேராசிரியருமான மா.வேதநாதன், சிவதொண்டன் நிலையத்தினரும் வலிகாம கல்விவலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளருமான சி.குகநேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வும் பரிசில்களும் வழங்கப்படும். (2)

# யாழில் கிராம மட்டத்திலான வறுமையை ஒழிப்பதற்கு விசேடதிட்டம் அறிமுகம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கிராம மட்டங்களில் வறுமை காரணமாக போசாக்கின்மை பொது மக்களிடையே அதிகரித்து காணப்படுவதாகவும் இந்த நிலையைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது எனவும் உடனடியாக கிராமப்புற மக்களின் போசாக்கு நிலைமைகளில் பிரதேச செயலர்கள் கணிப்பீடு செய்து அவர்களுக்கு வேண்டிய அவசர அவசியமான தேவைகளை ஆராய்ந்து இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற எல்லோருக்கும் போசாக்கு என்னும் சுகாதார அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதற்கு விசேட திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)




# சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் ஸ்ரீமகா பக்த விஜயம் என்னும் விடயம் பற்றி ம.அ. தங்கமயில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

# இன்னிசைக்கச்சேரி

(மருதங்கேணி)

தொண்டைமனாறுசெல்வச்சந்நிதிஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ-35)



அராலித் திருச்சபையில் கடந்த எட்டு வருடங்களாக பங்குத் தந்தையாக கடமையாற்றிய வண.ரி.ஈ. அசோக்குமார் அடிகளாரின் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சேகரகுரு வண யேசுதாஸ் தலைமையுரை ஆற்றுவதையும் வண.ரீ.இ.அசோக்குமார் அடிகளார் உரையாற்றுவதையும் அருகில் புதிய பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற அருட்சகோதரர் நேசன் கெனடி நிற்பதையும் படத்தில் காணலாம். *(படங்கள்: மிருசுவில் செய்தியாளர்)*

## தடை செய்யப்பட்ட பூச்சிநாசினி மருந்து கைப்பற்றப்பட்டது

பூச்சிநாசினிக் கட்டுப்பாட்டுச் சபையால் தடைசெய்யப்பட்ட இரசாயனங்களைக் கொண்டுள்ள ஒரு தொகுதி மருந்தை இலங்கை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

ஆறு பல்தேசிய விவசாய இரசாயனக் கம்பனிகளால் இறக்குமதி செய்யப்பட்ட இந்தத் தொகுதியில் 400 பொதிகள் காணப்பட்டன. ஒவ்வொரு பொதியிலும் ஆசனிக் போன்ற தடைசெய்யப்பட்ட நச்சுப் பொருட்கள் 100 தொடக்கம் 500 மில்லிகிராம் வரை காணப்பட்டன.

கிளைகோ பொஸ்பேற் என்றும் றவுண்ட் அப் என்றும் வழங்கப்படும் இரசாயனப் பொருள் இதில் அதிகமாகக் காணப்பட்டது. (ஸ்ரீ-2)

## தற்காலிக வீடமைப்புக்கான பொருட்கள் கையளிப்பு

அக்கராயன் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கரித்தாஸ் குடியிருப்புப் பகுதியிலுள்ள 33 வீடுகளுக்கு தற்காலிக வீடமைப்பதற்கு இரும்புப் பைப்செற்கள் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்ட நீட்ஸ் நிறுவன அதிகாரி ஜனேந்திரனால் நேரடியாக கையளிக்கப்பட்டது. இதற்குரிய மிகுதிப் பொருட்கள் ஒரு வாரத்தில் வழங்கப்படுமென அவர் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ)

## இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்குமாறு கோரிக்கை

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லை என தேசிய கடற்றொழில் ஒத்துழைப்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்தமான், மினிகோ தீவுகளிலும் தமிழ் நாட்டிலும் 67 இற்கும் மேற்கட்ட இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஹர்மன் குமார கூறினார்.

அந்தமான் தீவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் சுமார் ஒன்றரை வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமை குறித்து அரசாங்கம் உடனடியாக தலையீடு செய்து இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழில் ஒத்துழைப்பு ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் கூறுகையில், இலங்கை மீனவர்களை விடுவிப்பதில் சட்டத் தடைகள் இருப்பதாக தெரிவித்தார்.

இந்த மீனவர்கள் வெவ்வேறான மாநிலங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அந்தந்த மாநிலத்தின் சட்டங்களுக்கு அமைவாகவே அவர்கள் விடுவிக்கப்படுவதாக உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டில் கைதாகும் மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவதாக தெரிவித்த அவர் ஏனைய மாநிலங்களில் கைது செய்யப்படும் மீனவர்களை விடுதலை செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி கொள்வனவு

சுகாதார அமைச்சின் நிதி யொதுக்கீட்டில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 4வருடங் களின் பின் புதிய மின் பிறப்பாக்கி ஒன்று (750 KVA)நேற்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மின்பிறப்பாக்கி அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 26 மில்லியன் ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் வைத்தியசாலைக்கு சீரான மின் விநியோகத்தை வழங்கமுடியும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-3)

## சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்றோருக்கு அபராதம் விதிப்பு

நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இலக்கம் 02, கடை இலக்கம் 06 ஆகியவற்றிலிருந்து முறையே 11 கிலோகிராமும் 750 கிராமும் 69 கிலோகிராமும் அனுமதியின்றி சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை அப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரப் பாதுகாவலர், நல்லூர்ப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டு அரச மிருக வைத்தியரின் சிபாரிசுடன் மனிதப் பாவனைக்கு பயன்படுத்தக்கூடியதென பரிசோதிக்கப்பட்டு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த குற்றத்தை மன்றில் ஒப்புக் கொண்டமையால் இருவருக்கும் நீதிவான் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தும் இந்தப் பணத்தை மன்றுக்குச் செலுத்தும் வண்ணமும் மேலும் இவ்வாறு குற்றம் செய்யலாகாது எனவும் எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

குறித்த வழக்குடன் தொடர்புடையதும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுப்பொருளான 80 3/4 கிலோகிராம் மாட்டிறைச்சி மன்று கட்டளையிட்டதற்கு அமைவாக சிறைச்சாலை கைதிகளுக்காக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டது என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)

## கந்தமுருகேசனாரின் குருபூசைத் தினம்

(அல்வாய்)

தென்புலோலி அறிஞர் கந்தமுருகேசனாரின் 46 ஆவது குருபூசைதினம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் மந்திகை, புற்றளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கந்தமுருகேசனாரின் திருவுருவச்சிலைகளுக்கு மாணவ சமூகம் மலர்மாலை சூட்டி மலர் அஞ்சலி செலுத்தி குரு பூசையைக் கொண்டாடவுள் ளனர்.

அவரின் கல்வி சமூகத் தொண்டுகளை முன்னிட்டு அன்றைய தினம் இளைப்பாறிய கல்வி அதிகாரியும் வேலாயுதம் மகா வித்தியாலய முன்னாள் அதிபருமான சே. ஏகாம் பரநாதன் சொற் பொழிவாற்றவுள்ளார்.

அத்துடன் புற்றளை மகா வித்தியாலய மர்ணவர்களால் பக்திப் பாடல் இசைக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

## பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் மலசலகூடங்கள் துப்புரவுப் பணி

வடமராட்சிப்பகுதியில் உள்ள மலசலகூடங்கள் அனைத்தும் இம்மாதத் தொடக்கத்தில் இருந்து பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் பொது இடங்களில் உள்ள மலசலகூடங்களே மக்களின் நலன் கருதி இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்து.

இச்செயற்பாடானது மிகத்துரிதமாக மக்களின் சேவையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

## கிளி.மாவட்டத்தில் 2 சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்கள் நிர்மாணம்

(பருத்தித்துறை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கு 32.48 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் 24.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் 7.98 மில்லியன் ரூபா செலவில் பூரணப் படுத்தவுள்ளது.

இவ் வேலைத் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை கட்டடத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (ஸ்ரீ-10)

## விவசாயக் கண்காட்சி

(பருத்தித்துறை)

வவுனியா விவசாயப் பண்ணையில் யூலை 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறும் விவசாயிகள் விழாவை முன்னிட்டு விவசாயம் தொடர்பான மான கண்காட்சியொன்று நடை பெறவுள்ளது.

விவசாய விழா நடைபெறும் காலத்தில் அனைத்து விவசாய உள்ளீடுகளும் மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-10)

## நில அபகரிப்பில் ஈடுபட்ட 22 பேர் கைது செய்யப்பட்டனர்

பொத்துவில்,மணற்சேனை பிரதேசத்தில் தமிழ் மக்கள் குடியிருப்பு நிலங்களை அத்துமீறி அபகரிக்க முயன்ற கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் உட்பட 22 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த குமார தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி நிலங்களை அபகரிக்க பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் புல்டோசர், லொறி என்பனவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கோமாரி, மணற்சேனை பிரதேசத்தில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக 150 இற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இப்பிரதேசத்தில் 40 ஏக்கர் நிலம் தனக்கு சொந்தமானது என போலி ஆவணத்துடன் உரிமை கோரிச் சென்ற கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் தனது கையாட்களின் உதவியில் எல்லை நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டதுடன் பொது மக்களையும் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்கள் இதுகுறித்து மாவட்ட உதவி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இந்நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நில அபகரிப்பில் ஈடுபட்ட அனை வரையும் கைது செய்ததுடன்அதற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களையும் கைப் பற்றினார்.

சம்பவத்தில்கைது செய்யப்பட்டவர்களைநீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஸ்ரீ-2)





யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

தொண்ணூறாவது ஆண்டு விழா

விளையாட்டு நிகழ்வுகளுக்கான அநுசரணையாளர்கள்

யாழ் மாவட்டத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான

உதைபந்தாட்டம்

அநுசரணை : நெல்லியடி கிளினிக்

யாழ் மாவட்டத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான

வலைப் பந்தாட்டம்

அநுசரணை : ESP & Co.

கஜமுகன் ஹாட்வெயர் - யாழ்ப்பாணம்

வடமராட்சியின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையேயான

மென்பந்து கிறிக்கற்

அநுசரணை : செல்லமுத்தூஸ்

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றும்

மரதன் ஓட்டம்-ஆண்கள்

அநுசரணை : கணேசா ஹாட்வெயர்

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றும்

மரதன் ஓட்டம் - பெண்கள்

அநுசரணை : ESOFT Computer Studies

# நாடளாவிய ரீதியில் மீன் விற்பனை நிலையங்களை அமைக்கும் திட்டம்

## அமைச்சர் ராஜித நடவடிக்கை


(கொழும்பு)

பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி மீன்வகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் மீன் விற்பனை நிலையங்களை அமைக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன் ஓர் அங்கமாக தெனியாய மற்றும் பிற்றபக்த பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரு விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி சிறந்த தரத்திலான மீன்களை நியாய விலையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த திட்டம் அமுல்படுத்தப்படுவதாக மீன்பிடித்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இணுவில் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா ஆரம்பம்



இன்று கொடியேற்றம் (07.06.2011)

இயலிசை நாடகம் முத்தமிழ் கலைவளர்
இன்பமுறு சோலை திகழ் இணுவை கந்தனின்
கொடியேற்றம் காண்போம் வாரீர்
கோடி இன்பம் காண்போம் வாரீர்
கன்னல் கனிகொண்டு கந்தனுக்கு அபிஷேகம்
செந்நெல்லில் அமுது செய்து செவ்வேலுக்கு நிவேதனம்
அலங்காரப் பட்டுடுத்து அணிகலன்கள் பல பூட்டி
ஆராத்தி செய்யும் போது அழகாகத் தீபம் ஏற்றிடுவோம்.

இணுவையூர் செல்வம் பவான்

(5114)

1ஆம் திருவிழா உபயகாரர்

# யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கு தென்மராட்சியில் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற்பெண் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திற்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாக்குழுவின் தலைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபருமாகிய அ.கயிலாய பிள்ளை தலைமையில் இடம்பெறும் இவ் விழாவில் வாழ்த்துரைகளை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் புஸ்பா கணேசலிங்கம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், ஓய்வுபெற்ற மருத்துவர் டாக்டர் சு.சி.அருளானந்தம், சாவகச்சேரி பொது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் த.குகதாசன், இரண்டாம் வருட மருத்துவ பீட மாணவன் பா.கஜலக்சன் ஆகியோர் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக வசந்தம் என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்படும். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மலரின் வெளியீடுரையை ஆற்றுவார். யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சிறப்பு மலரை விழா நாயகிக்கு வழங்கிக் கௌரவிப்பார். (ஸ்ரீ-2)

# பேருந்துகள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டதால் விபத்து

(மல்லாவி)

பளை நகரப் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்ற தனியார் பேருந்தை யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்ட வேளை வீதியின் குறுக்கே சென்று வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவர் பேருந்து மோதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.15 மணிக்கு இடம் பெற்றது.

அத்துடன் குறித்த பேருந்து வீதியை விட்டு அருகிலிருந்த வேலியுடன் மோதி சேதமடைந்துள்ளது.

இதனால் சிறிது நேரம் ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கள் தாமதமடைந்தன. அத்துடன் சம்பவ இடத்திற்கு விரைந்த பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஸ்ரீ-15)

# யுத்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக ருவண்டா இராணுவத் தளபதிக்கு தண்டனை வழங்கினார் இலங்கையின் முன்னாள் நீதியரசர்



(கொழும்பு)

ருவண்டாவின் முன்னாள் இராணுவத் தளபதிக்கு இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா 30 ஆண்டுகால சிறை தண்டனை விதித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதவான்களில் ஒருவராக அசோக டி சில்வா கடமையாற்றி வருகின்றார்.



ருவண்டாவின் முன்னாள் இராணுவத் தளபதி அகஸ்டின் பிஸின் முகுவிற்கு இவ்வாறு 30 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 1994ஆம் ஆண்டு ருவண்டாவில் இடம்பெற்ற இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு, அண்மையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. ருவண்டா தொடர்பில் நியமிக்கப்பட்ட மூன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஒரு வழக்கு விசாரணை பூர்த்தியடைந்துள்ளது.

சம்பவங்களின் சிக்கல் தன்மை காரணமாக வழக்கு விசாரணை முடிவுறுத்த நீண்ட காலம் தேவைப்பட்டதாக முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் நிரந்தர நீதிவான்களில் ஒருவராக அசோக டி சில்வா கடமையாற்றி வருகின்றார். (ஸ்ரீ-2)

# ஸ்ரீ அம்மா பகவான் திருக்கல்யாண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் 35 ஆவது திருக்கல்யாண தின லோக கல்யாண மஹோற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூரர் சட்ட நாதர் கோவில் வீதியிலுள்ள யாழ். இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ)






நாவாந்துறை பங்குத்தந்தை வண. பிதா இராஜசிங்கம் அடிகளாரின் ஏற்பாட்டில் நாவாந்துறை றோ.க.தமிழ் கலவன் பாடசாலையில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அப்பகுதி வாழ் பங்கு மக்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் குருதியினை வழங்குவதைப் படங்களில் காணலாம்.

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உடற்பயிற்சியும் யோகாசனமும்

**03**



**உடற்பயிற்சியின்போது கவனிக்க வேண்டியவை**

உடற்பயிற்சியில் ஈடுபடவிரும்புவோர் பின்வருவனவற்றை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**மருத்துவர் ஆலோசனை**

உடற்பயிற்சி செய்பவர்கள் அல்லது விளையாட்டில் ஈடுபடுவோர் மிகவும் பல



வீனமான நோயாளிகளாக இருந்தால் அவர்களின் உயிருக்கு ஆபத்து வரக்கூடும்.

ஆஸ்துமா போன்ற நோய்கள் அல்லது வேறுவித துணைநோய்கள் இருந்தால் அவற்றின் தீவிரம் அதிகரிக்கக்கூடும்.

எனவே, நீங்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பு உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவரின் ஆலோசனையைப் பெறவேண்டும்.

**நிறைய திரவம் அருந்துங்கள்**


உங்களுக்கு வியர்வை அதிகமாகும் போது நிறைய திரவ இழப்பு ஏற்படக்கூடும். எனவே அதிகமான நீர் அருந்துங்கள், நீங்கள் அஜாக்கிரதையாக இருந்து, நீரிழப்பு ஏற்பட்டால் இது இரத்த சீனியின் அளவைப் பாதிக்கும்.

இதயத்தின் செயற்பாடு தலைகீழாக மாறும். தண்ணீர்தான் நீரிழப்பை ஈடுகட்ட சிறந்த திரவம். உடற்பயிற்சிக்குப் முன்னும் பின்னும் நிறைய தண்ணீர் அருந்துங்கள்.

**எவ்வளவு உடற்பயிற்சி போதுமானது?**

பயிற்சிக்கு முன்பு வோர்ம் அப் பயிற்சி அவசியம்.

ஏரோபிக் பயிற்சி செய்வதாக இருந்தால் தினமும் முப்பது நிமிடத்திற்கு இப்பயிற்சிகளில் ஈடுபட முயற்சி செய்யுங்கள். நீண்ட



நேரம் செய்ய இயலாவிட்டால் மெதுவாக ஆரம்பித்துச் செய்யுங்கள்.

தினமும் ஒரு நாளைக்கு பத்து நிமிடங்கள் செய்தால் போதுமானது.

ஒவ்வொரு வாரமும் இந்த நேரத்தை அதிகப்படுத்தி தினமும் அரை மணி நேரம் முதல் முக்கால் மணி நேரம் வரை உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

**சில எச்சரிக்கைகள்**

உடற்பயிற்சி செய்யும் போது சில அறிகுறிகள் வந்தால் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது.

களைப்பு அல்லது மயக்கம், மார்பகத்தில் இறுக்கம், மார்பக வலி, கை அல்லது தாடையில் வலி தோன்றுதல், படபடப்பு,

எதிர்பாரா விதமாக மூச்சு வாங்குதல்

மேற்கண்ட அறிகுறிகள் தெரிந்தால் மருத்துவரை அணுகுங்கள்.

மருத்துவர் பரிசோதித்து விபரம் கூறும் வரை தற்காலிகமாக உடற்பயிற்சிகளை நிறுத்தி வையுங்கள்.

**நீரிழிவு நோயுள்ளவர்கள் எவ்வளவு தூரம் நடை பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.?**

பொதுவாக நீரிழிவு நோய் வந்தவர்கள் அதிக தூரம் நடப்பதில்லை. இதன் காரணமாக நோயின் பாதிப்பு அதிகரிப்பதோடு, உடலில் இன்சுலின் சுரப்பதும் தடைப்பட்டு விடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக உடற்பயிற்சியோடு நடப்பதற்கும் நோயாளிகள் தயாராகவேண்டும்.

தினமும் காலையில் ஐந்து கி.மீற்றர் தூரம் நடப்பது நல்லது.

மெல்லோட்டமாகவோ, துரித ஓட்டமாகவோ ஓடுவது, நீச்சல் அடிப்பது, துரித நடைபோன்றவை அவசியமானவை.

பெரும்பாலானவர்கள் நடக்கும் முன்பு எதையும் சாப்பிடக் கூடாது என நினைக்கிறார்கள். இது தவறான கருத்தாகும்.

பொதுவாக வெறும் வயிற்றில் நடப்பது நல்லதல்ல. ஏதேனும் சாப்பிட்டுவிட்டு நடப்பதுதான் நல்லது. இவ்வாறு நடப்பதால் வயிற்றிலுள்ள இன்சுலின் சுரப்பி நன்றாக வேலை செய்யும். கெட்ட கொழுப்புகள் நீங்கி நல்ல கொழுப்பு உடலில் சேரும்.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

**உடற்பயிற்சி மேற்கொள்வோருக்கு சில விதிகள்**


- முறை தவறாமல் பயிற்சி செய்ய வேண்டும்.
- அளவு கணக்கிட்டு செய்தல் வேண்டும்.

(தொடரும்)




# விரும்பிய முகம் பெற...

**01**



வில் போன்ற புருவம், மீன் விழிகள், தாமரை கன்னங்கள், ரோஜா இதழ்கள், நேர் நெற்றி என்று எந்தப் பெண்ணும் கவிஞர் வரிகளுக்கு ஏற்ப தானும் அழகாக இருக்கவேண்டும் என்று தோன்றும். ஒவ்வொரு பெண்ணும், தானும் ஒரு ஐஸ்வர்யாராய் அல்லது சுஷ்மிதாசென் போல் அழகாக இருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறேதுமில்லை. அழகாக இருந்தாலும் அதிலும் ஏதேனும் குறை இருப்பதாய்த் தோன்றும்.

பெண்கள் எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் மேலும் அழகாக வேண்டும் என்கிற இயற்கையுணர்வு இவர்களுக்குள் இயல்பாகவே இருக்கும். தையற்கலைஞனிடம் தன் உடை இப்படி இருக்கவேண்டும், அப்படி இருக்க வேண்டுமெனக் கேட்டு தைத்துக்கொள்வது போல, எனது முகம் இப்படி இருக்க வேண்டும். இன்ன மாதிரியான அழகுடன், அமைப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுப் பெறுகிற நிலை ஏற்பட்டு விட்டது. அதை இலங்கையிலும் புரட்சிகரமாக, வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது என்பது நமக்கெல்லாம் பெருமை.

உலக அளவில் அதிக எண்ணிக்கையில் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்துள்ள பலர் கணனி மூலம் அறுவை சிகிச்சை செய்வதில் உலக சாதனை படைக்க வேண்டும் என்ற உத்வேத்துடன் ஜப்பான்



சத்திர சிகிச்சைக்கு முன்பு...

சத்திர சிகிச்சைக்கு பின்பு...



நாட்டில் கெஜாரோ நகரில் அகில உலக முகச்சீரமைப்பு டெலிநேவிகேசன் அறுவை சிகிச்சை மாநாடு நடைபெற்றது.

மருத்துவத் துறையில் கணனியின் செயற்பாடுகள் பற்றியும், கணனி மூலம் முகச் சீரமைப்பு செய்வது எப்படி என்பதையும் விரிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். பரந்து விரிந்த உலகைக் கையடக்க உலகமாக மாற்றி அமைத்த பெருமை கணனிக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு அறிவியல் துறையும் கணனியைச் சார்ந்தே வளர வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் உள்ளது.

கணனி மனித சிந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளும் எந்தச் செயலையும், அதாவது மனிதனின் சிந்தனைத் தேவைகளை விரிவாகவும், விரைவாகவும் மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் நின்று தானாகவே செய்து முடிக்கும் திறன் கொண்டது.

பயன்பாட்டாளரின் தேவைக்கேற்ப அவர் தரும் தகவல்களை ஏற்றுச் சேமித்து குறிப்பிட்ட செயல்முறையில் அத்தகவலை ஆராய்ந்து சிக்கல் தீர்க்கும் மின்னணு சாதனமே கணனி. இது ஒரு செயற்கை மூளை. கணனியின் பயன்பாடு மருத்துவத்துறையில் நாளுக்குநாள் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. கணனியின் உதவியின்றி மருத்துவ மையங்கள் சரியாகச் செயற்பட இயலாது என்ற நிலையும், கணனி மருத்துவப் பயன்பாட்டாளருக்கு மிக அவசியம் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

மருத்துவத் துறையில் அடிப்படைக் காரணங்களுக்காக கணனி எந்தெந்த விதங்களில் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போமானால் நோயாளர் நோய்த் தகவல் பதிவதற்கு, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளுக்கு, அறுவை சிகிச்சை முறைகளை ஆய்வதற்கு, நோயாளிக்கு சிகிச்சை பற்றி அறியச் செய்வதற்கு, மருத்துவரை

முகச் சீரமைப்பு நிபுணர்
டாக்டர் எஸ்.எம்.பாலாஜி MDS,
சென்னை-18

சந்திக்க நியமனம் கோருபவர்கள் தகவலைப் பதிவதற்கு, ஆலோசனை மற்றும் நோயறிதல் குறித்த கடிதங்களுக்குப் பதில் அனுப்புவதற்கு, வரவு -செலவு கணக்குகள் பதிய, விவரப்பட்டியல் மற்றும் தேவையான வற்றைத் தயார்படுத்துவதற்கு கணனி அவசியம் தேவை.

(தொடரும்)

# ஆட்சியை கவிழ்க்க ஜே.வி.பி.முயற்சி; அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது

(கொழும்பு)

ஆட்சியை கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி.கட்சி முயற்சி செய்து வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் சக்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயங்கப்போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச புலனாய்வு பிரிவினர் இந்த சதி முயற்சிகள் குறித்து விசாரணை நடத்தி வருவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலய மோதல்களின் போது குண்டர்கள் பொலிஸார் மீதுதாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட ரொசான் சானக்கவின் இறுதி கிரிகைகளின் போதும் சிலர் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்த போதிலும் ஊழியர்கள் புத்திசாதுரியமாக செயற்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலகங்களை ஏற்படுத்தாது அமைதியான முறையில் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலய குழப்ப நிலைமைகளுக்கு ஜே.வி.பி.கட்சி பொறுப்பு சொல்ல வேண்டுமெனவும் மக்களின் உரிமை போராட்டங்களை பயன்படுத்தி ஆட்சியை கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி.முனைப்புக்காட்டி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

போராட்டங்களின் போது மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பு என்ற பதாகை ஏந்தி ஆர்பாட்டம் நடத்தப்பட்டதாகவும் இதன் மூலம் ஜே.வி.பி.யின் உள்நோக்கம் அம்பலமாகியுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு விடயம் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அலரிமாளிகையின் கதவு எப்போதும் திறந்து இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

# கூட்டுறவு நிறுவனங்களுக்கு புதிய உறுப்பினர்களை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு கூட்டுறவு நிறுவனங்கள் தங்களது கிளை நிலையங்கள் ஊடாக குறைந்தபட்சம் புதிய உறுப்பினர்களை இம்மாத இறுதிக்குள் இணைத்துக் கொள்ள வேண்டும் என தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் இதனைக் கருத்திற் கொண்டு செயற்படுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கேட்டுள்ளார். (ஶ்ரீ-3)

# தேசிய பெண்கள் ஆணையம் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

பெண்களின் தேவைகளை கவனிப்பதற்காக ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய தேசிய பெண்கள் ஆணையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டம், ஆரோக்கியம், கல்வி, விஞ்ஞானம், சுற்றுச்சூழல் , தொழில்உறவு, உளவியல் உட்பட 10 விடயங்களை கவனிப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் இந்த ஆணைக்குழு 5 பெண்களும் 4 ஆண்களும் என மொத்தம் 9 பேர் அங்கம் வகிக்கத்தக்க வகையில் அமையவுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.


ஏற்கனவே, பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பெண்களை மட்டும் கொண்ட தேசிய மகளிர் செயலகம், இலங்கை மகளிர் பணியகம் ஆகியன இருக்கின்ற போதிலும் அவற்றில் பெண்கள் மட்டுமே அங்கம் வகிப்பதால் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நடைமுறைச்சிக்கல்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாகவே உத்தேச ஆணைக்குழு ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாக அமையவிருக்கின்றது என்றும் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏற்கனவே, நடைமுறையிலுள்ள இலங்கை மகளிர் பணியகத்தின் அதிகாரங்களை பறிப்பதாகவோ அல்லது குறைப்பதாகவோ இந்த ஆணைக்குழு அமைய மாட்டாது. போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் விடயத்தைப் பொறுத்த வரை தனது அமைச்சு இந்த அரசாங்கத்துடன் இணைந்து விசேட வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்தவிருப்பதால் உத்தேச ஆணைக்குழுவின் நோக்கத்தில் அது உள்ளடக்கப்படக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்றும் அவர் கூறினார். (ஶ்ரீ-2)

# தனியார் ஓய்வூதியத்திட்டம் புதிய முறையில் முன்வைக்கப்படவுள்ளது

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலத்தில் புதிய முறையிலான தனியார் ஓய்வூதிய சட்டமொன்றை கொண்டுவரவுள்ளதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அவர்களின் விருப்பத்திற்கு அமைய குறித்த சட்டம் கொண்டு வரப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில் ஆலோசனை சபையின் இணக்கப்பாட்டிற்கு அமைய சட்டத்தைச் செயற்படுத்த எண்ணியுள்ளதாகவும் தற்போது தனியார் ஓய்வூதியச் சட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ள போதிலும் ஓய்வூதியத் திட்டமொன்று தேவையென்ற நிலைப்பாட்டிலேயே அநேகமான மக்கள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய இத்தகைய ஓய்வூதியத் திட்டமொன்றின் தேவையை ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

# மற்றொரு ஐ.நா. பிரதிநிதிக்கு இலங்கை வர அனுமதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமற் போன, தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணை நடத்திவரும் ஐ.நா.வின் சிறப்பு பிரதிநிதி பிராங்க லாறூ இலங்கை வருவதற்கான அனுமதியை இரண்டாவது தடவையாகவும் அரசாங்கம் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதி பிராங்க லாறூவை இலங்கைக்கு அழைத்து காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத், படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க உட்பட காணாமற் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றையும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கூடிய இந்த அமைப்புக்கள் எடுத்துள்ளன.

37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புக்களை உள்ளடக்கிய சர்வதேச சுதந்திரமான கருத்துக் கூறல் பரிவர்த்தனை அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (ஶ்ரீ-2)

# யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் குறித்த பூரண விபரங்கள் வெளியிடப்படவேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்டவர்கள் தொடர்பில் பூரணமாக விபரங்கள் வெளியிடப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி பூரணமான அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான அறிக்கை இதுவரையில் நாடாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்:

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த வடக்கு, கிழக்கு மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலைமை குறித்து தகவல்கள் வெளியிடப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டா- செல்வா ஒப்பந்தமொன்றைப் போன்று ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்கள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# இரகசிய பொலிஸாரின் அறிக்கை ஒருவார காலத்தில் கையளிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க ஆர்பாட்ட சம்பவத்தில் பொலிஸ் மேலதிகாரிகளின் உத்தரவு எதுவுமின்றி பொலிஸார் தாம் நினைத்தவாறே துப்பாக்கி பிரயோகங்களை மேற்கொண்டிருப்பதாக இரகசிய பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லையெனவும் இரகசியப் பொலிஸார் இதுவரை முன்னெடுத்த விசாரணைகளிலிருந்து புலனாகியுள்ளது.

கட்டுநாயக்க ஆர்பாட்ட சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிஸார் இதுவரை 20 பொலிஸ் அதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை கலைத்துவிடுமாறு கூறியே தாங்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக இப் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளின் போது தெரிவித்தனர். ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்துக்கு ஆரம்பத்திலேயே ஆயுதங்களை எடுத்துச் சென்றதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இரகசியப் பொலிஸார் இது தொடர்பாக மேற்கொண்டு வரும் விசாரணைகளின் முழுமையான அறிக்கை இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் பதில் பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இலங்ககோனிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-2)

# பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10 ஆவது ஆண்டு விழா

(கொழும்பு)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 10ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மகரகம இளைஞர் மன்ற கட்டடத்தில் ஏ.ஆர். ரணதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதிய தலைவர் வி.ஶ்ரீ. சக்திவேல் வரவேற்புரையை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்விற்கு இலங்கையிலுள்ள பிரதேச செயலகப்பிரிவில் இயங்குகின்ற ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர், செயலாளர்,பொருளாளர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சமுகம் தரும் போது அழைப்பிதழ்களை எடுத்து வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

294. இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு எல்.எல்.ஆர்.சி.யின் செயற்பாட்டை நேரடியாக அவதானிப்பதற்கு குழுவினால் சாத்தியப்படவில்லை என்ற போதிலும், அரசாங்கத்தின் பதிலுக்கு மேலதிகமாக, குறிப்பாக எல்.எல்.ஆர்.சி அதன் இணையத்தளத்தில் பகிரங்கமாகப் பிரசுரித்த அமர்வுகளின் எழுத்துப்படிகளைப் பெற்றுக் கொள்ளவும், ஏனைய அரச மூலங்களில் இருந்து இலக்கியங்களுக்கான பிரவேசத்தைப் பெற்றுக் கொள்ளவும் குழுவுக்கு முடிந்தது. அது தேசிய மற்றும் சர்வதேச ஊடக அறிக்கைகளையும் தேசிய மற்றும் சர்வதேச சிவில் சமூகத்தின் சாட்சியத்தையும் எல்.எல்.ஆர்.சி.யுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்களின் விளக்கங்களையும் பகுப்பாய்வு செய்தது.

295. இது போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது ஆணைக்குழுவாக எல்.எல்.ஆர்.சி. இல்லை. எல்.எல்.ஆர்.சி. இனை உள்ளிட்ட இவ்வாணைக்குழுக்கள் விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் (1948) கீழ், பொதுச்சேவைகளின் நிருவாகத்தை மற்றும் அரச ஊழியர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கானவொரு சட்டகத்தை வழங்குவதற்காகவன்றி, அடிப்படையாக மனிதஉரிமைகள் மீறல்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான பொறித்தொகுதி ஒன்றாக அமைக்கப்படவில்லை. ஆயினும், சட்டத்தின் பொதுவான மக்கள் பாதுகாப்பு மற்றும் நலன் உட்பிரிவு மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான சட்ட அடிப்படையை வழங்குவதற்குப்போதுமானதாக உள்ளது.



இச் சட்டம் ஜனாதிபதிக்கு விரிவான அதிகாரங்களை வழங்குவதோடு, அவை கடந்த காலத்தில் ஆணைக் குழுக்களைக் கட்டுப்படுத்தி பாரிய முறையில் அவற்றின் சுயாதீனத் தன்னையையும் தாக்கத்தையும் பாதித்துள்ளது.

296. பாரிய மற்றும் திட்டமிடப்பட்ட மனித உரிமைகளின் துஷ்பிரயோகம் பற்றிய பொறுப்புக்கூறலுக்கான வேண்டுகோள்களுக்குப் பதில் அளிக்கும் முகமாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுக்கள் தொடர்ச்சியாக சஞ்சலத்தை ஏற்படுத்தக் கூடியவை என்ற அனுபவம் உண்டு.

30 வருடகாலப்பகுதியொன்றில் 1977 சன் சோனி ஆணைக்குழுவுடன் ஆரம்பித்து, இவ்வாணைக்குழுக்கள் பல தவறுகள் காரணமாக அவற்றின் நடவடிக்கைகளைச் சரிவரச் செய்ய முடியாமலிருந்துள்ளன. இப்பாரிய கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், சில ஆணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறிவதில் ஓரளவு மற்றும் பொறுப்புக்கூறல் பற்றிய முக்கியமான பரிந்துரைகளைச் செய்துள்ளன. இருந்த போதிலும், குழு முன்னிலையில் உள்ள தகவலின் படி, 1977 இல் இந்த ஆரம்பப் பொறித்தொகுதி ஆரம்பிக்கப்பட்ட 33 வருடகாலப்பகுதியில், ஆணைக்குழுவொன்றின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தனிநபர் அல்லது அமைப்பு மட்டத்தில் மிகக் குறைந்த அளவிலான பொறுப்புக்கூறலை மாத்திரமே ஏற்படுத்தியுள்ளன. சர்வதேச தரங்களுடன் ஒத்திருக்கும் விதத்தில் பொறுப்புக்கூறல் விடையங்கள் மீது நடவடிக்கை எடுக்க ஒன்றன் பின் ஒன்றாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் காட்டிய அரசியல் மனவுறுதிப்பாட்டின்மை, இந்த முன்னைய செயற்பாடகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கியபாடங்களாகவுள்ளன. எல்.எல்.ஆர்.சி. எவ்வளவு தூரத்துக்கு உண்மையான பொறுப்புக் கூறலுக்கான பங்களிப்பை வழங்குவதற்கான நிலைச் சக்தியை கொண்டிருப்பது என்பதை மதிப்பீடு செய்வதற்கு இந்த கடந்த கால அனுபவம் தோதாயிருக்கிறது.

**1. எல்.எல். ஆர்.சி. இன் ஆணை**

297. பயனுறு பொறுப்புக்கூறல் பொறித்தொகுதியாக எல்.எல். ஆர்.சி. இன் நிலைத்தக வினை மதிப்பீடு செய்வதற்கு அதன் ஆணை முக்கிய ஆக்கக் கூறுகளை வழங்குகிறது. 2010 மே 15 ஆம் திகதி ஜனாதிபதி ஆணையில் குறித்துள்ளபடி, எல்.எல்.ஆர்.சி. ஆனது 2002 பெப்ரவரி 21ஆம் திகதி மற்றும் 2009 மே 19 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலான பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது அதன் கடமையாக இருந்தது. அதாவது: (டி) 2002 பெப்ரவரி 27 ஆம் திகதி அமுலுக்கு வந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்கு வழிகோலிய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் மற்றும் 2009 மே 19ஆம் திகதி வரை மற்றும் அதன் பின்னர் நிகழ்ந்த நடவடிக்கைகளின் தொடர்; (டிடி) இது தொடர்பாக ஏதும் ஒரு நபர், குழு அல்லது நிறுவகம் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்கவேண்டிய பொறுப்பு; (டிடிடி) மீண்டும் நேராமலிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, நாம் அந்நிகழ்வில் இருந்து மற்றும் அவற்றுடன் சார்ந்த அவதானங்கள் தொடர்பில் கற்கக்கூடிய பாடங்கள்; (டிதி) அந்நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட ஏதும் நபர்கள் அல்லது அவர்களைச் சார்ந்திருப்போர் அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு இழப்பீட்டினைச் செயற்படுத்தக் கூடிய முறைமைகள்; (தி) அத்தகைய அவதானங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நேர்வதைத் தடுப்பதற்காக, சகல சமூகங்களுக்கிடையேயும் மேலும் தேசிய ஐக்கியம் அத்துடன் மீளிணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்காக மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய நிறுவக நிருவாக மற்றும் சட்டவாக்க நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகள் அவை செயற்படுத்தக்கூடிய ஆணைகள் ஆகும்.

298. அதன் ஆணைக்கு எவ்வாறு



அது விளக்கமளிக்கிறது. என்பதை எல்.எல்.ஆர்.சி. தெளிவாகக் குறிப்பிடவில்லை என்பதோடு, அதன் முன் ஆஜராக விரும்புவோருக்கு இவ்விடயத்தில் ஏதும் வழிகாட்டல்களை வழங்கவுமில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்வியைத் "தொடர்ந்து வந்த நிகழ்வுகளின் தொடர்" பற்றி ஆராய்வதற்காக தெளிவாக எல்.எல். ஆர்.சி. பணிக்கப்பட்டபோதிலும், அதன் ஆணையின் விதிகள் பொறுப்புக்கூறலை பொதுவான சொற்களில் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களைக் குறிப்பாக தெளிவான முறையில் அணுகவில்லை.

299. எல்.எல்.ஆர்.சி. இனைக் குழு நேரடியாகச் சந்திக்க முடியாதிருந்தால், எல்.எல்.ஆர்.சி. பற்றிய குழுவின் கேள்விகளுக்கு ஜனாதிபதிச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அரசாங்கத்தின் எழுத்து மூலமான பதில்கள் மற்றும் பெப்ரவரி 22 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின்போது சட்டமா அதிபர் இவ்விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய கருத்துக்கள் மீது குழு மாறாகத் தங்கியிருந்தது. உண்மையிலேயே யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விடயங்களை ஆராய்வதற்கான ஆணை எல்.எல். ஆர்.சி.க்கு வழங்கப்பட்டுள்ளதாக விளக்கிய சட்டமா அதிபர், பொறுப்புக்கூறல் பற்றிய கருத்து பொறுப்புடன் சமமான தொன்றாகும் என உறுதிப்படுத்தி ஆணைக்குழு அத்தகைய ஏதும் விடயங்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயினும், சர்வதேச தரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட மீறலுக்குப் பொறுப்பு எனக் காணப்பட்ட தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு விளைவுகளை அமர்த்து வதன் மூலம் பொறுப்புக்கூறல் முன் செல்வதால், இரு மனுவுருக்களும் நன்கு வரையறுக்கப்பட்டனவாக உள்ளன. பொறுப்பினைச் சாட்டுவது பொறுப்புக்கூறலுக்கு நிலைச் சக்தி கொண்ட முக்கியமான முன் நிபந்தனையாக இருந்த போதிலும், மனிதஉரிமைகள் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரிய மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய கடமையிலிருந்து அது ஒரு அரசாங்கத்தை விடுவிக்காது.

300. தென்னாபிரிக்காவின் ஆர்.சி மற்றும் ஐக்கிய இராசதானியின் ஈராக் பற்றிய விசாரணை (சில் கொட் விசாரணை) ஆகியவற்றின் அனுபவத்தை அரசாங்கம் பெற்றதாகக் குறிப்பிட்ட சட்டமா அதிபர், எனவே அவ்வமைப்புக்களுக்குச் சமமானதொன்றாக எல்.எல். ஆர்.சி. கணிக்கப்பட வேண்டும் என்றார். ஆயினும், இரு இடங்களிலும் முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. மேலே கூறப் பட்டது போன்று, எல்.எல். ஆர். சி.க்கு முற்றிலும் மாறுபட்டதாக, சம்பந்தப்பட்ட ஆட்களின் மற்றும் நிறுவனங்களின் அடையாளத்தை உள்ளிட்ட பாரிய மனித உரிமைகள் மீறல்களைப் புலானாய்வு செய் வதற்கு தென்னாபிரிக்க ஆர்.சிக்குத் தெளிவானதொரு ஆணை வழங்கப் பட்டிருந்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட சிலி மற்றும் கென்யா போன்ற ஏனைய உதாரணங்கள் உள்ளிட்ட, ஏனை நாடுகள் அபிவிருத்திசெய்த சிறந்த பழக்கங்கள் அவர்களது ஆணைக்குழுக்களுக்கு பாரிய மனித உரிமைகள்அல்லது மனிதாபிமான சட்டத்தின் மீறல்களை புலனாய்வு செய்யுமாறு ஆணையை வழங்கியிருந்தன.

301.தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் எப்படி எடுக்கப்பட்டன என்பதை உள்ளிட்ட ஐக்கிய இராசதானியின் ஈடுபாட்டை மற்றும் என்ன நேர்ந்தது சரியாகவும் நம்பகமானமுறையிலும் இனம் காண்பதற்காக கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களை இனம் காண்பதற்காகவும் 2001-2009 வரையிலான எட்டு வருட காலப்பகுதி யொன்றை மறு புறத்தில் ஈராக் பற்றிய விசாரனை பரிசீலிக்கிறது. அதன் ஆணை எல் எல் .ஆர் .சியுடன் நெருக்கமான சமாந்தரத்தைக் கொண்டதாகக் கூறப்

**தமிழாக்கம் தொடர் 37**

பட்ட போதிலும் தனியார் அல்லது நிறுவக பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக அது தெளிவாகவே வடிவமைக்கப்படவில்லை என்றாலும் அது ஆணைக்குட்பட்ட காலப் பகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான அரசியல் பொறுப்புக்களை ஆராய்ந்து எதிர்காலத்துக்கு அதிலிருந்து பாடங்களைப் பெறுவதைக் குறிப்பதாகவுள்ளது

(தொடரும்)

# வடக்கில் நியாயமான முறையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா?

## சந்தேகம் வெளியிடுகின்றன எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

வடக்கில் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுமா என்பதில் சந்தேகம் நிலவி வருவதாக எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது முறைகேடுகள் இடம்பெறக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்னமும் பூரண சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை என ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன.

நிலக்கண்ணிவெடி அகற்றுதல் மற்றும் இடம்பெயர் மக்கள் பிரச்சினை ஆகிய காரணிகளினால் இன்னமும் முழுமையான சிவில் நிர்வாகம் பிரதேசத்தில் ஏற்படவில்லை என அக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

வடக்கு தேர்தல்கள் தொடர்பில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், வடக்கு தொகுதி அமைப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது கட்சி உறுப்பினர்கள் பல்வேறு வழிகளில் நெருக்குதல்களை எதிர்நோக்கி வருவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித் ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கிறிஸ்தவ பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் இலவச பாடநூல்களைத் தவறாது எடுத்துவருமாறு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## சுனாமியால் சேதமடைந்த பாடசாலை புனர்நிர்மாணம்

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரலையின் போது முற்றாக சேதமடைந்த வல்வை சிவகுரு வித்தியாலயம் யுனிசெப் நிறுவனத்தினால் அதே இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 3 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஜெயபுரம் ம.வி மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புகுழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் தலைமயில் நடைபெறவுள்ளதாக பூநகரி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-84)

# யுத்தம் முடிந்த பின் தடுத்துவைக்கப்பட்ட பெண்போராளிகள் அனைவரும் விடுதலை

## இலங்கைக்கான சிரேஷ்ட இராஜதந்திரி ஜெனிவாவில் அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிந்தபின் தடுத்து வைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ஜெனிவாவில் வைத்து அறிவித்துள்ளார்.

இலங்கைக்கான சிரேஷ்ட இராஜதந்திரி சுகீஸ்வர குணரட்ண ஜெனிவாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுக்கூட்டத்தில் வைத்தே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா.வின் மனித உரிமைகள் குழு 17ஆவது கூட்டம் பெண்களுக்கான பாதுகாப்பு என்ற விடயம் தொடர்பாக நடைபெற்றது. இதில் இலங்கை அரசின் சார்பில் சுகீஸ்வர குணரட்ன கலந்து கொண்டார்.

அப்போது இலங்கையில் விடுதலைப்புலிகளின் பெண்போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயம் பற்றிய கேள்வி எழுந்தது.

இதற்குப் பதிலளித்த சுகீஸ்வர குணரட்ன, தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகளுக்காக புனர்வாழ்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதில் இணைத்துக் கொள்ளப்பட்ட முன்னாள் பெண்போராளிகள் அனைவரையும் நாம் விட்டுவிட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

முன்பு யுத்தம் நடைபெற்ற வன்னிப்பகுதியின் பெண்களுக்கான பாதுகாப்புக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற கேள்வியும் குழுவில் முன்வைக்கப்பட்டது.

இதற்கு இலங்கைப் பிரதிநிதி பதிலளிக்கையில், யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெண்கள் விவகாரங்களைக் கவனிக்க விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர தமிழ் பேசும் பெண்களையும் பொலிஸ் சேவையில் இணைக்கும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதிக்கு மட்டுமேயான அசையாநிலை பாதுகாவலர் கௌரவம் இராணுவத்தளபதிக்கும்

இதுவரை காலமும் ஜனாதிபதி மாளிகைக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த அசையா நிலைப் பாதுகாவலர் பாதுகாப்பு இராணுவத் தளபதிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அசையா நிலைப் பாதுகாப்பு என்பது ஜனாதிபதிக்கு கௌரவமளிக்கும் வகையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்தபாதுகாப்பொன்றாகும்.

அதன் பிரகாரம் ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயிலின் இருபுறமும் அசையா நிலையில் விறைப்பாக நின்று கொண்டிருக்கும் பாதுகாவலர்கள் இருபத்து நான்கு மணிநேரமும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருப்பார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவரை காலமும் பிரதமர் உள்ளிட்ட எந்தவொரு அரசியல்வாதிகளுக்கோ அல்லது பாதுகாப்புத் தரப்பின் உயரதிகளுக்கோ அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டதில்லை.

ஆயினும் கடந்த வாரம் முதல் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியவின் பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள இல்லத்திற்கும் அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமை குறித்த மகாநாட்டினை முன்னிட்டு உலகின் பல நாடுகளிலிருந்தும் இராணுவ உயரதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில் ஒரு கௌரவத்திற்காக மட்டுமே இராணுவத் தளபதிக்கு அவ்வாறானதொரு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)


## ஓர் ஆண்டு நினைவு பிரார்த்தனை அஞ்சலி



அன்னையின் மடியில் 13.01.1983

ஆழியின் பிடியில் 19.05.2010

திதி:- பூர்வபட்சசஷ்டி

கடலில் காவியமான

## செல்வன் நிர்மலானந்தன் நிராஜ்

19.05.2010 புதன்கிழமை அன்று தொண்டைமானாறு மயிரியதனை கடலில் நண்பர்களுடன் நீந்தி விளையாடச் சென்ற எமது செல்வம் திரும்பி வராமல் எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி அவ்வுலகம் சென்றிருப்பார் எனும் பரிதாப நிலைக்கு வர நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

இந்து சமய விழுமியங்களுக்கு இணங்க 07.06.2011 இன்று செவ்வாய்க்கிழமை ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு ஆத்மசாந்தி கிரியைகள் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். செல்வனின் துன்பியல் நிகழ்வையிட்டு நேரில் சமூகம் தந்தவர்கள் மற்றும் பல வகையிலும் எம்துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

மயிரியதனை, தொண்டைமானாறு.

தொ.பே: 021 321 5261 0772228660

நிர்மலானந்தன் தந்தை

(5094)

## பதினோராம் ஆண்டு கண்ணீர்த்துளிகள்...



திதி 07-06-2011



சின்னத்துரை கனகசபை

சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி

*எல்லையில்லாத கனவுகளாய் நீள்கிறது-மனத்திரையில் தினமும் நின் நினைவுகள்...!*

சு.பரமேஸ்வரன்
ஈஸ்வரி இல்லம், மட்டுவில் தெற்கு,
கல்வயல், சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5113)

# 50 ஆயிரம் மக்கள் உயிரிழக்க காரணமான சம்பவம் மனிதாபிமான நடவடிக்கையா?

## எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி

(கரவெட்டி)

50 ஆயிரம் மக்கள் உயிரிழக்க காரணமான தாக்குதல் சம்பவம் மனிதாபிமான நடவடிக்கையா என தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமை ப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு வருமாறு,

அண்மையில் பாதுகாப்பு அமைச்சினரால் கொழும்பில் நடாத்தப்பட்ட போர் அனுபவப் பகிர்வு மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறிய கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடையச் செய் துள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் என்று தமிழில் அழைக்கப்பட்டாலும் உண்மையான மொழிபெயர்ப்பு அரசாங்க முகவர். அப்படிப்பட்ட அரசாங்க முகவர் அரசாங்கத்தின் ஊதுகுழலாகச் செயற்படுவதை இனிமேலாவது நிறுத்த வேண்டும்.

வன்னியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை மனிதாபிமான நடவடிக்கை என வர்ணிக்க அம் மக்களுடன் நீண்ட காலம் வாழ்ந்த அரசாங்க அதிபருக்கு எப்படி மனம் வந்தது.

பூச்சிய அளவு இழப்பு என்பதன் அர்த்தம் இப்பொழுதுதான் எங்களுக்குப் புரிகிறது. இவர்களின் அகராதியின்படி ஒரு இலட்சத்துக்கு குறைவு என்றால் அது பூச்சியமாகத்தான் கொள்ளப்படும். அதனால்தான் 50 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டது மனிதாபிமான நடவடிக்கையாகத் தெரிகின்றது. வன்னியில் படுகாயமடைந்த 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சர்வதேச செஞ்சிலுவை கப்பல் மூலம் முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கும் புல்மோட்டைக்கும் கொண்டு செல்லப்பட்டதை மறந்து நியாயப்படுத்த எப்படி மனச்சாட்சி இடம் கொடுத்தது? இராணுவத்தினரின் பீரங்கித்தாக்குதலில் தான் காயம் அடைந்ததை சொல்ல மறுத்தது ஏன் என்பதைத் தெளிவுபடுத்துவாரா?

கொல்லப்பட்ட 50 ஆயிரம் மக்களையும் காயப்பட்ட 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களையும், விதவைகளாக்கப்பட்ட, உறவுகளை இழந்த, பெற்றோரை இழந்த 30 ஆயிரம் பிள்ளைகளையும், அங்கவீனர்களானவர்களையும், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டவர்களையும், சொத்துக்களை இழந்தவர்களையும், காணாமல் போனவர்களையும், தடுப்புக்காவலில் உள்ளவர்களையும் எண்ணியாவது எதிர்காலத்திலாவது மனச்சாட்சியுடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (எ-24)

# புலிகளின் மாபெரும் ஆயுதக்களஞ்சியம் தொப்பிகலையில் கண்டுபிடிப்பு

தொப்பிகலையில் விடுதலைப் புலிகளின் மாபெரும் ஆயுதக்களஞ்சியமொன்று விசேட விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆயுதக் களஞ்சியம் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டதுடன் விசேட உளவாளி ஒருவரின் தகவலொன்றினையடுத்தே அதனைக் கண்டுபிடித்துள்ளதாகபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

அங்கிருந்து ஆயுதங்களில் பிரதானமாக விமான எதிர்ப்புத் தோட்டாக்கள் 500க்கும் அதிகமாக இருந்ததுடன் டி56 ரக துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களும் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் மோட்டார் சைக்கிளொன்றின் உதிரிப்பாகங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆயுதங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பன கறுப்பு பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டிருந்த நிலையிலேயே புதைக்கப்பட்டிருந்ததுடன் கண்டெடுக்கப்பட்டபோது நல்ல நிலையில் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் ஆயுதக்களஞ்சியத்தின் அருகில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பதுங்குகுழி ஒன்றும் காணப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இலங்கையில் கடற்படை முகாம் அமைக்கும் திட்டமில்லை

## சீனா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர கடற்படை முகாம் அமைக்கும் திட்டம் கிடையாது என சீனா அறிவித்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நிரந்தர கடற்படை முகாம்களை அமைப்பதற்கு சீனா முயற்சி மேற்கொண்டு வருவதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என சீன பாதுகாப்பு அமைச்சர் லியாங் கான்கில் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் பத்தாவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு முகாம் அமைக்கப்பட வேண்டுமென்றால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தானின் குட்வாரிலும் இலங்கைத் துறைமுகம் ஒன்றிலும் கடற்படை முகாம்களை அமைப்பதற்கு சீனா ஆர்வம் காட்டி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்கவில் குழப்பம் ஏற்படுத்திய நபர்கள் குறித்து தகவல்கள் திரட்டல்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்களின் முனைப்பாக இருந்தவர்கள் பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தவர்களை அடையாளம் காண்பதற்காக வீடியோ பதிவுகள், தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் ஆகியவற்றின் மூலமாக தகவல்களை பாதுகாப்பு அதிகாரிகள் திரட்டி வருகின்றனர்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின்பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுக்கல்ல இதை தெரிவித்துள்ளார்.

தேசிய புலனாய்வு பணியகத்திடம் இப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர் ஒருவர் மரணமான சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள தனிநபர் ஆணைக்குழுவிடமும் இத்தகவல் கையளிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்எனவும்லக்ஸ்மன் ஹுலுகல்ல கூறினார். (ச-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்ல அபிவிருத்தி சார்ந்த பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி மகாதேவா சைவ சிறார் இல்லத்தில் இடம்பெறும்.

பழைய-புதிய அங்கத்தவர்கள், நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மகாதேவா ஆச்சிரம நிலைய தலைவர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார். (எ)

# 2011.06 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1099-முதலாவது சிலுவைப் போர்: ஜெருசலேம் மீதான தாக்குதல் ஆரம்பமானது.

★ 1494-ஸ்பெயினும் போர்த்துக்கல்லும் தாம் கண்டுபிடித்த புதிய உலகத்தைத் தமக்கிடையே பகிர்ந்து கொள்ள உடன்பாட்டை எட்டினர்.

★ 1654-பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.

★ 1692-ஜமெய்க்காவில் மூன்றே நிமிடங்கள் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1600 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1832-கனடாவில் கியூபெக்கில் ஐரிய குடியேறிகளால் கொண்டுவரப்பட்ட கொள்ளை நோய் காரணமாக 6000 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1863-மெக்சிக்கோ நகரம் பிரெஞ்சுப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

★ 1893-மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

★ 1905-நோர்வே சுவீடனுடனான தொடர்புகளைத் துண்டித்தது.

★ 1917-முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில் மெசைன் என்ற இடத்தில் 10000 ஜேர்மனியப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டையில் 23 கனேடிய போர்க்கைதிகளை நாசிப் படைகள் கொன்றனர்.

★ 1981-இஸ்ரேலிய வானூர்திகள் ஈராக்கின் ஒசிராக் அணுக்கரு உலை மீது குண்டு வீசித் தாக்கி அழித்தன.

★ 1989-சுரினாமில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 168 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1991-பிலிப்பைன்ஷில் பினடுபோ எரிமலை வெடித்து 7 கி.மீ உயரத்துக்கு அதன் தூசிகள் பறந்தன.

★ 2000-கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமைச்சர் சி.வி.குணரத்ன மற்றும் தெஹிவளை மாநகர உதவி மேயர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

★ 2006-மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுங்கல் கிராமத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் சிக்கி 6 மாதக் குழந்தை உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2007-கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★ 1974-மகேஷ் பூபதி, இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர்

★ 1975-ஏலன் ஐவர்சன், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1906-பொன்னம்பலம் குமாரசுவாமி, இலங்கையின் சட்டசபை உறுப்பினர் (பி. 1849)

★ 1964-ஆறுமுகம் ஆச்சாரியார், யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசிரியர் (பி. 1890)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 10

"தெருவில் யாராவது அடிபட்டுக் கிடந்தால் என் மனம் பதைக்கிறது. கண்களில் தானாகக் கண்ணீர் வருகிறது. அப்படியிருக்க, மக்கள் கூடியிருக்கும் பகுதிகளில் வெடிகுண்டு வைத்து ஆண், பெண், முதியோர், குழந்தைகள் எனப்பலரை ஒரே சமயத்தில் ஈவு இரக்கம் இன்றிக்கொல்ல தீவிரவாதிகளுக்கு எப்படிமனம் வருகின்றது?"

வெடிகுண்டு வைக்கும் தீவிரவாதிகள் எல்லோரும் தீயவர்கள் அல்ல; சில நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, தவறாக வழி நடத்தப்படுபவர்கள்.

வீட்டில் நுழைந்துவிட்ட கரப்பான் பூச்சிகளை மருந்தடித்து மல்லாக்கச் செய்தால், நீங்கள் சந்தோஷமடைவீர்கள் என்று உங்கள் குழந்தைகள் நினைப்பதில்லையா? அதே மனநிலையில்தான் தீவிரவாதிகளும் செயல்ப்படுகிறார்கள். அவர்களுடைய கடவுள் அவர்களிடம் இப்படியான செயல்களைத்தான் பெரிதும் எதிர்பார்க்கிறார் என்று நினைக்கிறாார்கள்.தங்கள் மதமோ,இனமோ,தேசமோ... அதன்மீது தீராப்பற்றுக்கொண்டு , அதற்கு நல்லது செய்வதாக நினைத்துத்தான் தங்கள் உயிரையே பணயம் வைக்க அவர்கள் துணிகிறார்கள். மற்றப்பிரிவுகளைவிட, கடவுளின் பெயரை முத்திரை குத்தி மனிதர்களைப் பிரிக்கும்போது, அதன் தீவிரம் மிகச் சக்தி வாய்ந்ததாகிவிடுகிறது.

சங்கரன்பிள்ளை ஒரு நேர்முகத்தேர்வில் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

"எதிர்ப்பதம் சொல்... நல்லது."

"கெட்டது"

"வா"

"போ"

"சிரி"

"அழு"

"ஒல்லி"

"பல்லி"

"தப்பான பதில்"

"சரியான கேள்வி"

"உனக்கு வேலையில்லை"

"எனக்கு வேலை உண்டு"

இப்படித்தான் பல மதங்கள், அடுத்தவர் சொல்வதற்கெல்லாம் எதிராக எதையாவது சொல்வது என்று ஆரம்பித்து, பின்பு நிறுத்தத் தெரியாமல் அர்த்தமற்ற எல்லைகளுக்குப் போய்விட்டன. பல நூற்றாண்டுகளாக மனிதர்கள் தங்கள் நம்பிக்கைகளை யார் தட்டிக்கேட்டாலும் பொறுத்துக்கொள்ள முடியாமல் மனதுக்குள் பொங்கிக்கொண்டே இருக்கிறார்கள். தங்கள் காழ்ப்பை மறக்காமல், அடுத்தடுத்த தலைமுறைகளிடம் ஒப்படைத்து விட்டுப்போகிறார்கள். இந்தக் காழ்ப்பு நீக்கப்படும்வரை அடுத்து வரும் தலைமுறைகளிடமும் தீவிரவாதிகள் உருவாகிக்கொண்டுதான் இருப்பார்கள்.

## அப்பழுக்கற்ற அன்பு செலுத்துங்கள்

"இந்தக்குற்றங்களுக்கு தீர்வே கிடையாதா?"

என்னைப் பொறுத்தவரை உயிர்ச் சக்திக்கு எதிராகச் செய்யப்படும் எதுவும் குற்றம்தான். இந்தஉலகில் ஆனந்தமாக இருக்கத் தெரியவில்லை என்றால் அது கூட மா பெரும் குற்றம்தான்.

நாம் வாழும் சமூக அமைப்பு சிதைந்து விடாமல் இருக்க, சில பொதுவான நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. மற்றவையெல்லாம் அவரவர் வளர்த்துக் கொண்ட சில நம்பிக்கைகளின் அடிப்படையில் செய்யப்படும் விபரீதச்செயல்கள். தங்களுக்குச் சந்தோஷம் தரும் என்று எண்ணிச் செய்யப்படும் முட்டாள்தனமான செயல்கள்.

இன்று கோபம் கொண்டு ஒரு தீவிரவாதியை சுட்டுவீழ்த்தினால் , இன்னும் பத்தும் நூறுமாக தீவிரவாதிகள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள். இதைச்சரி செய்ய வேண்டும் என்றால், இலைகளைக் கிள்ளிக் கொண்டு இருப்பதைவிட வேர்வரை நம் கவனம் ஊடுருவவேண்டும்.

கடவுள் பெயரால், மனிதர்கள் பல தலைமுறைகளாகப் பிரித்தாளப்பட்டு இருக்கிறார்கள். இதுதான் உன்மதம், இதுதான் உன் கடவுள் என்று பிரித்துப்போதித்து, நம்மையறியாமல் நம் குழந்தைகளைக் குற்றவாளிகளாக வளர்ப்பதை நாம் நிறுத்த வேண்டும். நாடுகள், மதங்கள், இனங்கள் யாவும் தன்னை உயர்த்தி மற்றையதைத் தாழ்த்திப் பார்க்கும் எண்ணத்தைக் கைவிடவேண்டும்.

சங்கரன்பிள்ளை தன் நண்பருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். தெருவோரத்தில் ஒருவன் அங்குமிங்கும் வளர்ந்திருக்கிற புல்லைத்தேடித்தேடிப் பிடிங் கி உண்பதைப்பார்த்து, நண்பர் காரை நிறுத்தினார். விசாரித்தார்.

"ஐயோ... சாப்பாடு வாங்க காசில்லை. அதுதான் புல்லைத்தின்கிறேன்!" என்றான் அந்த ஆள் பரிதாபமாக!

"அப்படியா! சரி, வண்டியில் ஏறு . உன் வயிராற உணவுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார் நண்பர்.

"என் மனைவியும் நான்கு குழந்தைகளும்கூட பசிதாங்காமல் அங்கே புல் தின்கிறார்கள் பாருங்கள்!"

"அவர்களையும் கூப்பிடு!"

அந்த ஏழைக்குடும்பம், காரின் பின்னிருக்கையில் தங்களைத் திணித்துக் கொண்டது.

"உனக்குத்தான் எவ்வளவு பெரிய மனசு!" என்றார் சங்கரன்பிள்ளை நெகிழ்ச்சியுடன்! "நீ வேற... வெட்ட ஆளில்லாம என் தோட்டத்தில் மூன்றடி உயரத்துக்குப் புல் வளர்ந்திருக்கிறது." என்றார் நண்பர்.

என்ன கிடைக்கப்போகிறது என்பது புரியாமல், கூட்டம்கூட்டமாக மக்கள் இப்படித்தான் இனத்தலைவர்கள் பின்னால் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அறியாதவர்கள். அவர்களை நாம் அன்போடு அணுகவேண்டும்.

"சகமனிதர்களைக் கொல்பவர்களிடம் எப்படி அன்பாக இருக்கமுடியும்?"

அன்பு என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்?

உங்களுக்குள் சுகமானதோர் உணர்வைக் கிளரச்செய்ய, ஒரு சிலரைப்பயன்படுத்திக்கொள்கிறீர்கள். அதற்கு அன்பு என்று பெயர் சூட்டியிருக்கிறீர்கள்.நீங்கள் அன்பாக இருக்கவேண்டும் என்றால், அதை இன்னொரு நபர் மீதுதான் வெளிப்படுத்த முடியும் என்ற அடிப்படையே தவறு. அன்பாக இருப்பது என்பது ஓர் உணர்வு. "ஏன் ஒரு சிலரோடு நிறுத்திக் கொள்கிறீர்கள்? இந்த உலகில் இருக்கும் எல்லாவற்றையும் பயன்படுத்தி ஆனந்தத்தை உணருங்கள்." என்கிறேன் நான்.

அப்பழுக்கற்ற அன்பினால் வஷத்தையும் அமுதாக மாற்றலாம்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழத்தின் முதற் பெண் கவிஞரும் முதற் பெண் மொழிபெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்மாள்

01



ஸ்ரீமதி ந.பத்மாசனி அம்மாள்

ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை பத்மாசனி அம்மாளை முதன் முதலில் இனங்கண்டு இக்கட்டுரை ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட கருத்து (ஞானம் நூறாவது இதழில் இடம் பெற்ற புலோலியின் பெண்கல்விப் பாரம்பரியம் என்னும் கட்டுரை) இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தின் நவீன கவிதைபற்றிய முனைப்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் கலாநிதி செ.யோகராசா அவர்களும் தமது "ஈழத்துப் பெண்கள்- வளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்" என்னும் கட்டுரையில் "ஈழத்தில் மரபுக்கவிதை எழுதிய முதற்பெண் கவிஞர் பண்டிதை இ.பத்மாசனி அம்மாள். அவர் எழுதிய முக்கியமான நூல் புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி ஆகும்." என இக் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறார். ( ஜீவநதி - கார்த்திகை- மார்கழி 2009 )

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஈழத்தின் முதற் பெண் கவிஞராக பண்டிதை பத்மாசனி இராசேந்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து அவர் பற்றிய தொடர்ச்சியான தேடுதல்களின் விளைவாக அவரை ஈழத்தின் முதற்பெண் மொழிபெயர்ப்பாளராகவும் நூல் வெளியீட்டாளராகவும் கொள்வதற்கான ஆதாரங்கள், அவர் எழுதிய கட்டுரைகள் எனப்பல விடயங்கள் இன்று சேரிக்கப்பட்டுள்ளன. எனது மாணவர் சமரபாகு சி.உதயகுமாரின் விடாமுயற்சியால் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பத்மாசனியின் மகன் டாக்டர் இரவீந்திரன்மூலம் அம்மையாரின் புகைப்படம், பிறந்த, இறந்த திகதிகள் பற்றிய தகவல்கள் முதலியவற்றைப் பெறவும் முடிந்துள்ளது. கிடைத்த தகவல்களை ஒரே பார்வையில் தொகுத்துத் தருவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பிறப்பும் கல்விப்பின்னணியும்**


பத்மாசனி புலோலியிலே நமசிவாயம் தங்கரத்தினம் தம்பதிகளின் மகளாக 06.06.1903 இல் பிறந்தார். சைவத்தமிழ் பெண்கள் கல்வி கற்பதற்கெனப் பாடசாலைகள் இல்லாத அக்காலத்தில், தமது வீட்டுச் சூழலில் கிடைத்த திண்ணைக்கல்வி மூலமே தமது அறிவையும் கவித்துவத்தையும் வளர்த்துக்கொண்டார். பத்மாசனியின் தாயாரான தங்கரத்தினத்தின் குடும்பம் சிறந்த கல்விப் பாரம்பரியம் கொண்ட குடும்பம் ஆகும். திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரியின் சமஸ்கிருதப்பேராசிரியரும் இரகுவம்சம், போன்ற வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்தவருமான வ.கணபதிப்பிள்ளை இலக்கணக் கொட்டர் என்று அழைக்கப்பட்டவரும் நன்நூற்காண்டிகை உரை விளக்கம், பாரத உரை என்பவற்றை எழுதியவருமான வ.குமாரசாமிப்புலவர் ஆகியோர் தங்கரத்தினத்தின் மாமன்மார். இவ்விருவரின் சகோதரியான பாறாய்ச்சி என்று அழைக்கப்பட்ட

**ம.பா. மகாலிங்கசிவம்**

பார்வதி அம்மையாரின் பேரப்பிள்ளைகளான பத்மாசனி, பாலாம்பிகை ஆகிய இருவரையும் தமது கற்பித்தல்மூலம் மதுரை தமிழ்ச் சங்கப் பண்டிதைகள் ஆக்கியவர். மருமகனான சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார். பேரனான குருகவி ம.வே. மகாலிங்கசிவம் ஆகியோரும் பர்வதிஅம்மையாரிடம் கல்வி கற்றவர்களே.

(தொடரும்)



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபைப் பிரிவில் புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மினுக்கன் பேக்கம் பியசகைத்தறிப் பயிற்சி நிலையத்தை கைத்தொழில் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் அண்மையில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் நிலையத்தை நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் உட்பட அதிகாரிகளுடன் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# தேசிய கிரிக்கெற் அணியில் வடபகுதி வீரர்களுக்கும் இடமளிக்கப்படும்

## நாமல் எம்.பி.தெரிவிப்பு

கிளிநொச்சியில் விளையாட்டுத்துறை மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் இம்மத்திய நிலையத்தின் ஊடாக வட பகுதி இளைஞர், யுவதிகள் மத்தியிலான விளையாட்டுத்துறைக்கான ஆற்றலை மேலும் மேம்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவிக்கும் வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் யாழ் இளைஞர்களுக்கென பாரிய அளவிலான நீச்சல் தாடகம் ஒன்றும் அமைக்கப்படும். அடுத்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது எங்களுடைய தேசிய கிரிக்கெட் அணியில் வட பகுதியைச் சார்ந்த திறமை மிக்க வீரர்களும் இடம்பெறவேண்டும்.

நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொது நலவாய விளையாட்டுப் போட்டியிலும் பங்கு கொள்ளும் வடபகுதி வீரர்கள் தங்கப் பதக்கங்களை வெற்றி கொள்ள வேண்டும்.

கிராமங்களிலிருந்து மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், கல்விமான்கள் உருவாக வேண்டும்.

புனர்வாழ்வு நிலையங்களை விட்டு வெளியேறும் உங்களுக்கு ஒரு சமூக கடமையுள்ளது. சுதந்திரமாக செயல்பட முடியும், தொழில் செய்யலாம், எந்தவொரு துறையினையும் நாடலாம், நீங்கள் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு குடும்பத்தினருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பிரயோசனப்படுத்துங்கள் என்றார். (ஸ்ரீ-2)

# பீரிஸின் பதவி பறிபோகும் நிலையில்?

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவரது பதவியில் இருந்து விரைவில் வெளியேற்றப்படுவார் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு கடந்த மாதம் அவர் மேற்கொண்டிருந்த பயணம் தோல்வியில் முடிந்ததை அடுத்து ஜனாதிபதி அவர் மீது கடும் சீற்றம் கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

அமைச்சர் பீரிஸின் இந்தியப் பயணத்தின் இறுதியில் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் நேர்மையான நல்லிணக்கத்துக்கு இலங்கை அரசு தயார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவரை எந்த ஓர் அரச அறிக்கையிலும் நேர்மையான நல்லிணக்கம் என்ற பதம் பாவிக்கவில்லை என்று சுட்டிக்காட்டும் இராஜதந்திர வட்டாரங்கள் அப்படி ஒரு பதம் பயன்படுத்தப்பட பீரிஸ் எப்படி அனுமதித்தார் என்று ஜனாதிபதி ஏனைய அமைச்சர்களிடம் சீறினார் என்கின்றன.

அமைச்சர் பீரிஸ் தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ளார். அவர் நாடு திரும்பியதும், வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து நீங்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க புதிய வெளிவிவகார அமைச்சாராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கொழும்பு மாவட்டத்தில் 2257 டெங்கு நோயாளர்கள்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 5 மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 257 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்துள்ள விசேட அறிக்கையொன்றிலேயே இந்த தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் 22 மரணங்கள் இடம்பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே, கொழும்பு மாநகரசபை பிரதேசசபைக்குள்ளும், தெஹிவளை, மொறட்டுவ, கொலன்னாவ, மஹாகம மற்றும் கடுவலை பிரதேசங்களிலும் டெங்கு தொற்று பரவலாக காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக தெஹிவளை பிரதேசத்தில் டெங்கு தொற்றாளர்கள், அதிகளவில் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ள நிலையில், நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்பொருட்டு 200 பொது சுகாதார பரிசோதகர்களும், 350 பாதுகாப்பு தரப்பினரும் பங்கேற்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# புதிய பொலிஸ்மா அதிபராக விக்ரமசிங்கவை நியமிக்க திட்டம்?

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்ரம சிங்கவை அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிப்பது குறித்து மகிந்த கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி செயலகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விக்ரமசிங்கவின் குடும்பத்தினர் பொலனறுவை மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியமான ஆதரவாளர்கள் என்பதால் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்திற்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் விருப்பம்தெரிவித்துள்ளார்எனதெரியவருகிறது.

தற்போது பதில் பொலிஸ் மா அதிபராக பணியாற்றிவரும் இலங்கக்கோன் உட்பட மேலும் மூன்று அதிகாரிகள் விக்ரமசிங்கவை விட மூத்த நிலையில் இருக்கும் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவரை பொலிஸ் மா அதிபராக நியமிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 40 இலங்கை மீனவர்கள் கைது

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து, மீன்பிடியில் ஈடுபட்ட 40 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய-இலங்கை மீனவர்கள் தமது நாடுகளின் கடல் எல்லைகளை தாண்டி சென்று மீன்பிடியில் ஈடுபடுவது குறித்து, இரண்டு நாடுகளின் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்ற போதிலும் மீனவர்கள் கடல் எல்லைகளை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்ந்து வருவதாக மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடல் எல்லையை தாண்டிச் சென்று மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள போதிலும், மீனவர்கள் ஆலோசனைகளை மீறி செயற்பட்டு வருகின்றனர் என்றும் அந்த அதிகாரி குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்திய கடலோர காவற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடுமுழுவதும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வுகள்

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்கள் குறித்து விழிப்புணர்வு செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதாக மனித உரிமை ஆணையகம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் மக்களை தெளிவுபடுத்தும் வகையில் இந்த செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கிராமப் புறங்களில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் மக்கள் தெளிவுபடுத்தப்பட உள்ளனர். மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் மக்கள் போதியளவு தெளிவின்றி காணப்படுவதாக மனித உரிமை ஆணையகத்தின் வட மத்திய மாகாண இணைப்பாளர் குமுதினி விதாரண குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் கூட மனித உரிமை விவகாரங்கள் பற்றி போதிய தெளிவின்றி இயங்கி வருவதாகவும் மனித உரிமை தொடர்பில் மக்கள் போதியளவு விளக்கத்துடன் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# கடந்த ஆண்டு பிரான்சில் புகலிடம் கோரியோரில் இலங்கையர்களே அதிகம்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் பிரான்சில் அகதி அந்தஸ்து பெற்ற 8 ஆயிரத்து 447 பேரில் இலங்கையைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். இலங்கை யைச் சேர்ந்த 1 ஆயிரத்து 529 பேர் கடந்த ஆண்டு அகதி அந்தஸ்து பெற்றுள்ளனர்.

இலங்கையை அடுத்து ரூவியாவைச் சேர்ந்த 802 பேரும் கொங்கோ நாட்டைச் சேர்ந்த 498 பேரும் புகலிடம் பெற்றுள்ளனர்.

மொத்தமாக கடந்த ஆண்டில் 52 ஆயிரம் பேர் புகலிடம் கோரியதில் 8 ஆயிரத்து 447 பேருக்குத்தான் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயர்கல்வி கற்கும் நோக்கில் பிரான்ஸ் வந்தோரில் 10 ஆயிரத்து 359 சீன மாணவர்களும் 5 ஆயிரத்து 739 மொறக்கன் மாணவர்களும் 5ஆயிரத்து 608 அமெரிக்க மாணவர்களும் அடங்குவர்.

இவர்கள் கல்விக்காக ஆண்டு ஒன்றிற்கு 44 ஆயிரத்து 794 தொடக்கம் 65ஆயிரத்து 842 யூரோக்களை செலவு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# காணியின் உரித்தை உறுதிசெய்யும் "பிம்சவியா" நிகழ்ச்சித்திட்டம்

பிம்சவியா நிகழ்ச்சித்திட்டமானது மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சினூடாக அமுல் செய்யப்படுகின்றது. இதன் மூலம் மிகவும் பாதுகாப்பானதும் பயனுள்ளதுமான தற்போது இலங்கையில் காணியின் உரித்தை உறுதிசெய்வதற்காக பயன்படுத்தப்பட்டுவரும் காணி உறுதிக்கு பதிலாக பூரண அரசாங்க உத்தரவாதமுடைய பிம்சவியா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணியின் உரித்துச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் காணிகள் புதிதாக அளந்து எல்லைகளிட்டு சிக்கலற்ற உரித்தை உறுதி செய்து உரித்துச்சான்றிதழ் விநியோகிகக்கப்படும் இந்த பிம்சவியா நிகழ்ச்சித்திட்டம் தற்போது தெரிவுசெய்யப்பட்ட பிரதேசசெயலாளர் பிரிவுகளில் இலவசமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதனடிப்படையில் யாழ் மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இத்திட்டம் அடுத்த மாதமளவில் முதலில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் ஆவன,

1) இலங்கையில் காணிப்பதிவு முறையை மிகவும் நம்பகத்தன்மையுடனும் விணைத்திறன் மிக்கதும், இலகுவான முறையொன்றாக மாற்றியமைத்தல்.
2) காணிப்பிரச்சினைகளையும் காணிப்பிணக்குகளையும் தீர்த்து வைப்பதனூடாக காணிகளின் உரித்தை வலுப்படுத்துதல்.
3) சிறந்த காணி முகாமைத்துவத்திற்காக கணனி மயப்படுத்தப்பட்ட காணித்தகவல் முறையொன்றை தோற்றிவித்தல்.

நாம் தற்போது காணியின் உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணத்தை உறுதி என அழைக்கின்றோம். இம்முறையில் பல பாதகங்கள் காணப்படுகின்றது. அவ்வாறான பாதகங்களை நோக்குகையில்,

1) காணிப்பரிமாற்றம் பற்றி தயாரிக்கப்பட்ட ஆவணமொன்றைப் (உறுதி) பதிவு செய்வதால், குறித்த காணியின் "உரித்து" எனப்படுகின்ற தூய்மையான உரிமை உறுதி செய்யப்படாமை.
2) உறுதியைப்பதிவு செய்யும் தொழிற்பாடு தெளிவானதும், தூய்மையானதுமான தொழிற்பாடாக விளங்காமை.
3) உறுதியொன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லைகளின் அடிப்படையில் காணியின் அமைவிடத்தை நிலத்தில் திட்டவட்டமாக அடையாளங்கண்டு கொள்ள முடியாதுள்ளமை. அத்துடன் பெரும்பாலான காணி உறுதிகளுடன் காணிக்கான வரைபடம் குறிக்கப்படாமை.
4) உறுதியொன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் அதனுடன் தொடர்புடைய முந்திய உறுதியில் இருக்காத விபரங்களாக இருப்பதற்கான சாத்தியம் காணப்படுதல்.
5) காணியொன்றின் உரித்தைத் தேடுதல், அதனை உறுதிப்படுத்தி அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் செலவு கூடியதும் நீண்ட காலம் எடுக்கக்கூடியதுமான தொழிற்பாடாக விளங்குதல்.
6) காணியொன்றின் உரித்து உறுதியொன்றின் மூலம் நிர்ணயிக்கப்படாமை.
7) காணியொன்றின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் மீண்டும் தேடிப் பார்த்து உரித்து அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளமை.
8) ஒரே காணிக்காக பல உறுதிகளை பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை. ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட காணி உறுதி போலியானதொன்றாக இருப்பினும் கூட, முதற்பதிவு என்ற அடிப்படையில் அதற்கு செல்லுபடியாகும் தன்மை காணப்படுதல்.
9) காணி உறுதி தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு அல்லது அதனை ஏற்றுக்கொள்வதற்கு சட்டத்தினால் எவரும் பிணைக்கப்படாமை.
10) காணி உறுதிகளில் காணப்படுகின்ற இந்த சந்தேக நிலைகாரணமாக, வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களுடன் காணி உறுதியொன்றை சமர்ப்பித்து கொடுக்கல் வாங்கல்களை செய்து கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளமை. (உதாரணமாக வங்கிக்கடன் பெறும் போது கடந்த 30 வருட கால உரித்தை பரிசோதிப்பதற்கு நேர்ந்துள்ளமை).
11) காணி உறுதியை முதலீடாக மாற்றுவதில் காணப்படும் சிரமங்கள் காரணமாக காணியினதும் நபர்களினதும் முன்னேற்றம் தடைப்படுதல்.
12) இன்று முழு நாட்டிலும் அமையப்பெற்றுள்ள அனைத்து காணிகளினதும் உரிமையை உறுதிப்படுத்துகின்ற பொதுவான முறையொன்று நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளும் குறைபாடுகளும் எழுந்துள்ளமை.
13) அரசாங்க மற்றும் தனியார் காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறையொன்று எமது நாட்டில் அமுலில் இல்லாததன் காரணமாக அரச நிறுவனங்களுக்கும், திணைக்களங்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளமை.
14) நாட்டிலுள்ள அனைத்துக் காணிகளும் தேசப்படமாக்கப்பட்டு விபரிக்கப்படாமை.

இவ்வாறான குறைபாடுகள் காணப்பட்டமையினால் 1998ஆம் ஆண்டு 21ஆம் இலக்க சட்டக்கோவையின் பிரகாரம் 2001ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட கால உரித்துப் பதிவு மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள் கருத்திட்டத்தினூடாக இம் முறை இலங்கையில் அமுல் செய்யக்கூடிய மிகச்சிறந்த முறை இதுவாகுமென இனங்காணப்பட்டது. இத்திட்டம் வெற்றியளித்ததைத் தொடர்ந்து பிம்சவியா எனும் பெயரில் காணி உரித்துப் பதிவு செய்யும் அரசாங்க நிகழ்ச்சித்திட்டம் காணி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. காணி உரித்துப் பதிவு செய்யும் முறையின் பிரகாரம்,

1) காணியின் அமைவிடம்
2) அதன் எல்லைகள்
3) காணியின் விஸ்தீரணம்
4) உரித்தும் அவ் உரித்தின் தன்மையும்

ஆகிய விபரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு காணி உரித்து பதிவு செய்யப்படுகின்றது. இந்தப் புதிய முறை மூலம் நாட்டிற்கும் மக்களுக்கும் இருவகையான நன்மைகள் கிடைக்கின்றன. அவை,

1) உடனடியாக கிடைக்கும் நேரடி நன்மைகள்
2) மறைமுகமாகக் கிடைக்கும் நீண்டகால நன்மைகள்

**உடனடியாகக் கிடைக்கும் நேரடி நன்மைகள்**

1) சந்தேகத்திற்கிடமில்லாத சட்டரீதியான முறையில் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்படல்.
2) காணியின் உரித்து தொடர்பாக அரசின் உத்தரவாதம் கிடைக்கப் பெறுதல்.
3) உரித்துச்ச ன்றிதலொன்றை உடைய காணியொன்றை விற்பனை செய்யும் போது அல்லது கொள்வனவு செய்யும் போது, சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்காக அலைந்து திரியவேண்டிய தேவை ஏற்படாமை. இதனால் துரிதமாகவும், இலகுவாகவும், நம்பகமான முறையிலும் காணிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
4) காணியின் உரித்து உறுதிப்படுத்துவதன் காரணமாக காணியை அபிவிருத்தி செய்வதில் காணக்கூடிய தடைகள் அகற்றப்படுதல்.
5) காணிக் கொடுக்கல் வாங்கலின் போது முன்பு போன்று காணி தொடர்பாக கடந்த 30 வருட உரித்தை தேடி ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை எழாமை இதனூடாக கடன் வசதிகளைப் பெறுவதற்காகவும் பிணையாக வைப்பதற்கும் காணிகளை இலகுவாகப் பயன்படுத்துவதற்கு முடியுமாக இருப்பதால் காணி உரிமையாளர்கள் துரிதமாக முன்னேற்றத்தை நோக்கிச் செல்லல்.
6) காணிப் பிணக்குகள் குறைவடைதல், காணிப் பிணக்குகள் காரணமாக மனிதக் கொலைகளும் சண்டைசச்சரவுகளும் குறைவடைதல், காணிக் கொடுக்கல் வாங்கல்களின் போது மக்களுக்கு அதிக செலவினை ஏற்பதற்கு நேரிடாமை.
7) காணி உறுதியைப் போன்றல்லாது காணி உரித்துச் சான்றிதழ் மிகவும் எளிதானதொன்றாக தெளிவாக இருத்தல்.
8) ஒவ்வொரு காணி உரித்துச் சான்றிதழும் எளிதானதுமான சரியானதுமான வரைபடமொன்றைக் கொண்டிருப்பதனால் காணி உரிமையாளருக்கு தனது காணியை இலகுவாக இனங்காண முடியுமாக இருத்தல்.
9) காணி உரித்துச் சான்றிதழ் விநியோகிக்கும் நடவடிக்கை அரசினால் மட்டுமே மேற்கொள்ளப்படுவதால் காணி தொடர்பில் மோசடிகளும் சச்சரவுகளும் மட்டுப்படுத்தப்படுதல்.
10) நாட்டிலுள்ள அனைத்துக் காணிகள் தொடர்பிலும் தகவல் முறைமையொன்று நிறுவப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுவதால் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை உச்ச மட்டத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

**மறைமுகமாகக் கிடைக்கும் நீண்டகால நன்மைகள்**

1) நீண்டகால அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்கான பிரதான காரணியாக அமைதல்.
2) மக்கள் தமக்குச் சொந்தமான நிலத்தின் உண்மையான பெறுமதியை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பதனால் தன்நம்பிக்கையும் அபிமானமும் ஏற்படுதல்.
3) காணி தொடர்பான மோசடிகள் படிப்படியாகக் குறைதல்.
4) இலகுவாக முதலீடு செய்யக் கூடிய மூலதனச் சொத்தாக மாற்றமடைவதனால் மக்களின் வருமானம் அதிகரிக்கின்றது அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.
5) காணிச் சந்தை பலப்படுத்தப்படுதல்.
6) காணிக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரிப்பதனூடாக அரசாங்கத்தின் வருமானம் படிப்படியாக அதிகரித்தல். இதனால் தேசிய வருமானம் அதிகரிப்பதுடன் பொருளாதார அபிவிருத்தி வேகம் உயர்வடைதல்.
7) காணிகளில் காணப்படும் வளங்களை அறிந்து கொள்ள முடிகின்றமை.
8) இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் முடிகின்றமை.
9) இலங்கைக்குச் சொந்தமான நிலவளத்தை இனங்காண்பதற்கும், காணி மோசடிகள் இடம்பெறுவதை தடுப்பதற்கும் முடிகின்றமை.
10) இந்நிகழ்ச்சித்திட்டம் எமது எதிர்கால சந்ததியினர் சார்பில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடாக அமைதலும் அவர்களது வாழ்க்கையில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான முதலீடாக அமைதலும்.

தி.விமலன் (M.A)
காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உதவியாளர்
பிரதேச செயலகம், கோப்பாய்

11) நாட்டின் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவதில் தற்போதுள்ள குறைபாடுகள் மட்டுப்படுத்தப்படுதல்.
12) வியாபார நடவடிக்கைகளின் போதும் வங்கி நடவடிக்கைகளின் போதும் வினைத்திறன் அதிகரித்தல்.

இவ்வாறு மிகவும் முன்னேற்றகரமான குறைபாடுகள் இல்லாத அரசாங்க உத்தரவாதமுடைய மிகவும் எளிமையான காணி உரித்துப் பதிவு முறையொன்றை இலங்கையில் அறிமுகம் செய்வதன் மூலம் எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமாகும்.

# சலே நாட்டில் இருந்து வெளியேறியதால்

# ஏமன் மக்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டம்

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே, மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 4ஆம் திகதி சவுதி அரேபியா சென்றார். அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக வந்த தகவல் களை அடுத்து, மக்கள் மகிழ்ச்சிக் கொண்டாட் டங்களில் மூழ்கினர்.

சலேவுக்குப் பின், யார் ஜனாதிபதியாக வருவது என்ற அதிகாரப் போட்டி ஆரம்பிக் கும் பட்சத்தில் ஏமன் மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படலாம் என்று நிபுணர் கள் கூறியுள்ளனர்.

ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் முதல் மக்கள் போராடி வருகின்றனர். பதவி விலகுவதாக அறிவித்து மூன்று முறை அவர் பின்வாங்கியதை அடுத்து, அங்கு அவரது ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்க ளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

எதிர்ப்பாளர்களுக்கு நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு வழிகளில் ஆதரவு வழங்கி வந்தவ ரும் நாட்டின் மிகப் பெரிய பழங்குடியினமான ஹஷீத் இனத்தின் தலைவருமான ஷேக் சாதிக் அல் அமரின் ஆதரவாளர்கள் மக்களு டன் இணைந்து போராட்டத்தில் குதித்தனர். அதன் பின் காட்சிகள் மாறத் தொடங்கின. மோதல்கள் உள்நாட்டுக் கலவரமாக மாறக் கூடிய அபாய நிலையை எட்டின.

### காயம் அடைந்த சலே

தென்பகுதியில் உள்ள ஜின்ஜிபார் நகரை அல்-கொய்தாவின் ஆதரவாளர்களான ஆயுதம் ஏந்திய 300 வீரர்கள் கைப்பற்றி னர். இதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இராணுவம் எதிர்ப்பாளர்கள் மீது பீரங்கி துப்பாக்கி மற்றும் போர் விமானங்கள் மூலம் தாக்கு தலை நடத்தியது. கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையின் வளாகத்தில் உள்ள அல் நஹ்டியான் மசூதியில், ஜனாதிபதி, பிரதமர், துணைப் பிரதமர், பாராளுமன்றின் இரு சபாநாயகர்கள், ஜனாதிபதி மகன்கள் மற்றும் உயரதிகாரிகள் பலரும் கூடி தொழு கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மசூதியின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஜனாதிபதி, பிரதமர், துணைப் பிரதமர், பாராளுமன்ற சபாநாயர்கள், ஜனாதிபதி மகன்கள் ஆகி யோர் காயம டைந்தனர். ஜனாதிபதியின் இதயத்துக்குக் கீழே, ஏவுகணையின் சிதறல் கள் கடும் வேகத்தில் துளைத்து விட்டன. அவரது கழுத்து, முகம் மற்றும் தலைகளிலும் காயங்கள் ஏற்பட்டன.

பிரதமர், துணைப் பிரதமர், சபாநாயகர்கள் இருவர், மேலும் ஒருவர் நபர் என ஐந்து பேர் உடனடியாக சவுதி அரேபிய தலைநகர் ரியாத் துக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப் பட்டனர்.

ஜனாதிபதி சலேயும், சிகிச்சைக்காக ரியாத் துக்குச் சென்றார் என கடந்த 4 ஆம் திகதி முதலில் தகவல்கள் வந்தன. உடனடியாக அரசுத் தரப்பில் அவை மறுக்கப்பட்டன. ஆனால் சலே கடந்த சனிக்கிழமை மாலை ரியாத்துக்கு தனி மருத்துவ விமானத்தில் சென்றுவிட்டார். அவருடன் அவரது மனைவி உள்ளிட்ட 35 குடும்ப உறுப்பினர்களும் சென்றுள்ளனர்.

### மக்கள் கொண்டாட்டம்

ரியாத்தில் உள்ள காலித் அரசர் விமான நிலையத்தில் அவர் வந்திறங்கிய தகவலை சவுதி அதிகாரிகள் உறுதிப்படுத்திய பின் ஏமனில் பல்வேறு இடங்களில் ஜனாதிபதி யின் வெளியேற்றத்தை மக்கள் மகிழ்ச்சியு டன் கொண்டாடினர்.

ஏமன் மக்கள் புரட்சிக்கு அடித்தளமிட்ட சனா பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஏமன் புதிதாகப் பிறந்துள்ளது என்று கோஷ மிட்டு தங்கள் சந்தோஷத்தை வெளிப் படுத்தினர்.

ஏமன் அரசியல் சாசனப்படி ஜனாதிபதி பொறுப்பை துணை ஜனாதிபதி அப்துல் ரப்பு மன்சூர் ஹாடி ஏற்றுக் கொண்டார். அதன்படி இராணுவம், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத் தும் அவர் வசம் இருக்கும். அவர் ஏமன் ஜனா திபதியின் காயம் அடைந்த மகன்களையும் இராணுவ உயரதிகாரிகளையும் விரைவில் சந்திக்க உள்ளார்.

### அதிகாரப் போட்டி ஆரம்பம்

அகமது உள்ளிட்ட மூவரும் சனாவில் இருக்கும் பட்சத்தில் அதிகாரப் போட்டிக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படும். துணை ஜனாதிபதி மன்சூர் ஹாடி சலேயின் மகன் அகமது, பழங்குடியினத் தலைவர் அமர், மக்கள் போராட்டத்தில் இணைந்திருந்த எதிர்க்கட்சிகள் ஆகியோருக் கிடையில் பல மோதல்கள் நிகழக் கூடும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

மொத்தத்தில் தற்போது ஏமன் பெருங் குழப்பத்தில் உள்ளது. ஜனாதிபதி வெளியேற் றத்துக்குப் பின், அல்- கொய்தாவின் கை ஓங்கும் வாய்ப்பும் உள்ளது. அதனால் நிலைமையை சவுதி உள்ளிட்ட அண்டை நாடுகளும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. (ஸ்ரீ-2)






ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே, சவூதி அரேபியா தப்பியோடியதாக வந்த தகவலையடுத்து தலைநகர் சனாவில் அரசு எதிர்ப்புப்படையைச் சேர்ந்த இராணுவத்தினர் தேசியக் கொடியேந்தி மகிழ்ச்சியை கொண்டாடுவதைப் படத்தில் காணலாம்.

# 2030இல் முக்கிய உணவுப் பொருட்களின் விலை இருமடங்காக உயரும் அபாயம்

## சர்வதேச நிறுவனம் எச்சரிக்கை

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகளவில் முக்கிய உணவுப் பொருட்களின் விலை, இருமடங்காக உயரும் அபாயம் இருப் பதால் உலக நாடுகளின் தலைவர்கள் விவ சாய உற்பத்தியைப் பெருக்க விரைந்து செயற்பட வேண்டும் என சர்வதேச நிறுவனம் ஒன்று எச்சரித்துள்ளது. சர்வதேச நிறுவன மான ஆகஸ்பாம் வறுமை மற்றும் அநீதிக்கு எதிராகப் போராடி வருகிறது. இந்நிறுவனம் சமீபத்தில் வளரும் வளமான எதிர்காலம் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இன்னும் 20 ஆண்டுகளுக்குள், அத்தி யாவசிய உணவுப் பொருட்களின் விலை 120 சதவீதம் முதல் 130 சதவீதம் வரை அதிகரிக்கும்.


பருவநிலை மாற்றத்தால் விளைச்சலில் ஏற்படும் மாற்றங்களே, இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கும். இன்றைய நிலையில், உலகளவில் வறுமையின் பிடி யில் சிக்கித் தவிக்கும் மக்கள், தாங்கள் அன் றாடம் பெறும் கூலியில், 80 சதவீதத்தை, உணவுக்காகவே செலவிட வேண்டியுள்ளது. உற்பத்தி குறைந்து கொண்டே செலவிட வேண்டியுள்ளது.

உற்பத்தி குறைந்து கொண்டே வருவதால் 2050இல் உணவுப் பற்றாக்குறை 70 சத வீதமாக அதிகரிக்கும். கடந்த 1990இல் இரு ந்தே உணவு உற்பத்தி அரைவாசியாக குறை ந்து விட்டது. பத்தாண்டுகளுக்கு ஒரு சதவீதமாக அது குறைந்து கொண்டே வருகிறது. ஒவ்வொ ருவருக்கும் குறைவில்லாத அளவு உணவு அளிக்கக்கூடிய ஆற்றல் இருந்தும் கூட இன் றைய நிலையில், ஏழு பேரில் ஒருவர் பட்டினி யால் அவதிப்படும் அவலம் நிலவுகிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் மட்டும், 80 இலட்சம் மக்கள், உணவுப் பற்றாக்குறையால் அல் லல்படுகின்றனர். உணவுப் பற்றாக்குறை யால் ஏற்படும் பிரச்சினைகளால், மிக மோசமான ஒரு காலகட்டம் உருவாகும். அதை நாம் தவிர்க்க வேண்டும் என்றால், பருவ நிலைகளில் பெரும் மாற்றம் ஏற்படு வதைத் தடுக்கவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் உலக நாடுகளின் தலைவர்கள் விரைவான நடவடிக்கைகளை எடுத்தே தீர வேண்டும் என ஆக்ஸ்பாம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

## 14 பயங்கரவாதிகள் பலி



பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தான் பழங் குடியினர் பகுதியில் உள்ள ஒரு மதராஸா வையும் ஒரு வீட்டையும் குறிவைத்து அமெ ரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 14 பயங்கரவாதிகள் பலியானதாக தகவல்கள் தெரிவித்தன.

தெற்கு வரிசிரிஸ்தானின் முக்கிய நகர மான வானாவுக்கு அருகே மதரஸா மற்றும் வீட்டின் மீது நேற்றுக்காலை 4 ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் 5 வெளிநாட்டு பயங்கர வாதிகள் உள்ளிட்ட 14பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த மற்ற பயங்கரவாதிகள்பஞ்சாப் மாகாணம் மற்றும் உள்ளூரைச் சேர்ந்தவர் கள் என வானா பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

வானாவில் இருந்து 17 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஷலாம் டானா பகுதியில் தலிபான் பயங்கரவாதி மலாங்கை குறிவை த்து ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் கள் தெரிவிக்கின்றன.தலிபானின் முல்லா நஸீர் பிரிவைச் சேர்ந்தவர் மலாங்.வானா மற்றும் அதனருகில் உள்ள பகுதிகளை அவர் கட்டுப்படுத்தி வருகிறார்.

கடந்த 4 நாட்களில் தெற்கு வசிரிஸ்தா னில் ஏவுகணைத் தாக்குதல் நடைபெறுவது இது இரண்டாவது முறையாகும். கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடத்தப்பட்ட ஏவுக ணைத் தாக்குதலில் மும்பை தாக்குதல் வழக்கில் தேடப்பட்டு வந்த இல்யாஸ் காஷ்மீரி உள்ளிட்ட 9 பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட னர். நேற்று நடைபெற்ற தாக்குதலுடன் அந்த நாட்டில் இந்த ஆண்டு 34 முறை ஏவுகணைத் தாக்குதல்களை அமெரிக்கா நடத்தியுள்ளது. இதன்மூலம் 250இற்கும் மேற்பட்ட பயங் கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜப்பானிய பிரதமர் நவோட்டோ கான் ஓகஸ்டில் பதவி விலகுவார்?

ஜப்பானிய பிரதமர் நவோட்டோ கான் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் பதவி விலக முடிவு செய்தி ருக்கிறார். அதை அவருடைய அரசில் இடம் பெற்றுள்ள கூட்டணிக் கட்சியான மக்களின் புதிய கட்சி தலைவர் சுஹு்கா கமேய் தெரிவிக் கிறார். ஜப்பானிய பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர் மானத்தைக் கடந்த வாரம் கொண்டு வந்தன. அதன் மீது நடந்த வாக்கெடுப்பில் நூலிழை யில் நவோட்டோ கான் வெற்றி பெற்றார்.

அவரது அரசுக்கு எதிரான அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அவரு டைய கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப் பினர்களே எச்சரித்திருந்தனர். எனவே அவர் தோல்வி அடைவார் என்றே எதிர்க்கட்சியினர் நம்பிக்கையுடன் இருந்தனர். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்றவுடன் நிருபர்க ளைச் சந்தித்த பிரதமர் நவோட்டோ கான் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் பல இருப்பதால் அடுத்த ஆண்டு பிரதமர் பதவி யிலிருந்து விலகிவிடுவேன் என்று கூறினார்.

இதனால் எதிர்க்கட்சிக்காரர்கள் தோழமைக் கட்சிக்காரர்கள் மட்டும் அல்ல. அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் கலக்கம் அடைந் துள்ளனர். இப்படியே போனால் இவர் முழு பதவிக்காலமும் இருந்துவிடுவார் போலிருக் கிறதே என்று வருத்தப்பட ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் தான் அவர் வரும் ஓகஸ்ட் மாதம் விலகிவிடுவார் என்று தோழமைக் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜப்பானியப் பொருளாதரத்தைச் சீரமைக்க இரண்டாவது கூடுதல் பட்ஜெட்டை ஓகஸ்ட் மாதம் அவர் தாக் கல் செய்யவிருக்கின்றார். அதன்பின் அவர் பதவிவிலகிவிட தயாராக இருக்கிறார் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ராம்தேவை எதிர்த்து போராட்டம்; காங்கிரஸுக்கு சோனியா உத்தரவு

(சென்னை)

ஊழல், கறுப்பு பணத்துக்கு எதிரான உண்ணாவிரதம் இருந்து வரும் ராம்தேவ் மத்திய அரசையும் சோனியாவையும் கடுமையாக விமர்சித்து வருகிறார். இதற்கு தக்க பதிலடி கொடுப்பதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியா வீட்டில் நேற்று முன்தினம் அவசர ஆலோசனை கூட்டம் நடந்தது. அதில் ராம்தேவுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று விவாதித்தனர்.

கூட்ட முடிவில் ராம்தேவ் எப்படிப்பட்டவர்? அளவுக்கு அதிகமாக எவ்வளவு சொத்துக்கள் சேர்த்து வைத்துள்ளார்? அவரது உதவியாளர்கள் செய்துள்ள கிரிமினல் குற்றங்கள் என்னென்ன? ராம்தேவுக்கு பின்னணியில் இருந்து உதவி செய்பவர்கள் யார்- யார்? என்பன போன்றவற்றை மக்களிடம் விளக்கமாக எடுத்துச் சொல்லுங்கள் என்று சோனியா உத்தரவிட்டார். தேவைப்பட்டால் ராம்தேவை எதிர்த்து போராட்டம் நடத்தவும் தயங்கக் கூடாது என்று சோனியா அறிவுறுத்தினார்.

இந்த தகவல்களை காங்கிரஸ் பொது செயலாளர் ஜனார்த்தனன் திவேதி டில்லியில் நிருபர்களிடம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

ராம்தேவ் விடுத்துள்ள சவாலை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்கிறது. அவர் ஒரு ஏமாற்று பேர்வழி என்பதை நாங்கள் விரைவில் நிரூபிப்போம். மக்களிடம் செல்வாக்கும் ஆதரவும் பெற இயலாத சில கட்சிகளும் சில மதவாத அமைப்புகளும் ராம்தேவை முன்னிறுத்தி சட்டப்படியான ஜனநாயக ஆட்சியை சீர்குலைக்க முயல்கின்றனர்.

காங்கிரஸ் அரசை கவிழ்க்க வேண்டும் என்று மதவாத சக்திகள் முயல்கின்றன. காங்கிரஸ் நிர்வாகிகளும் தொண்டர்களும் ஒற்றுமையாக இருந்து இந்த முயற்சிகளை தடுக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் சாதனைகளையும் கொள்கைகளையும் மக்களிடம் விளக்க வேண்டும். சோனியா உங்களுடன் தனிப்பட்ட யார் பற்றியும் விவாதிக்கவில்லை. ராம்தேவ் பற்றி சொல்ல ஒன்றும் இல்லை. அவருக்கு சில சக்திகள் உதவுகின்றன. எனவே டில்லி பொலிஸ் மேற்கொண்ட நடவடிக்கை நூற்றுக்கு நூறு சரியான நடவடிக்கை ஆகும் என்றார். (ஸ்ரீ-2)

# கனிமொழி கைது நான் செய்த தவறு

## கருணாநிதி கண்ணீர்

எனது மகள் கனிமொழி டில்லி திஹார் சிறையில் உள்ளார். அவர் திருவாரூர் தொகுதியில் பம்பரமாக சுழன்று தேர்தல் பணிகளில் ஈடு பட்டார். ஊர் ஊராக சென்று பிரசாரம் செய்து தி.மு.க.வின் வெற்றிக்காக பாடுபட்டார். ஆனால் அவர் இன்று மத்திய அரசின் உத்தரவாலோ அலட்சியத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ சிறையில் உள்ளார் என கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார். திருவாரூரில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கனிமொழி செய்த தவறு என்ன? கலைஞர் டி.வி.யில் பங்குதாரராக இருந்த ஒரே காரணம் தான். அதனால் தான் சிறையில் வாடுகிறார். அதுவும் ஒரு மலரை வைத்தால் 10 நிமிடத்தில் வாடிவிடும். அப்படிப்பட்ட இடத்தில் அடைபட்டு இருக்கிறார்.

ஸ்பெக்ட்ரம் பிரச்சினையில் 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடி பணம் விரயமாகி விட்டது என்று கூறினார்கள். அதன் பின்னர் அது குறைந்து 30 ஆயிரம் கோடி என்றார்கள். ஆனால் அதில் யார் குற்றவாளி என்ற குழப்பத்தில் கனிமொழி கைது செய்யப்பட்டுள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் அதைப் பற்றி அதிகம் பேச வேண்டாம். கனிமொழி செய்த குற்றம் நான் செய்த குற்றம். காரணம் கலைஞர் டி.வி.யில் பங்குதாரராக இரு என்று நான் கூறினேன். அவர் வேண்டாம் என்று கூறினார். நான் வற்புறுத்திய காரணத்தால்தான் பங்குதாரராக கனிமொழி சேர்ந்தார். இவ்வாறு பேசிய கருணாநிதி கண்ணீர் வடித்தார். (ஸ்ரீ-2)


# உண்ணாவிரதம் தொடரும் பாபா ராம்தேவ் அறிவிப்பு

(டில்லி)

ஊழலுக்கு எதிரான எனது உண்ணாவிரதப் போராட்டம் விரைவில் தொடரும் என்று பாபா ராம்தேவ் தெரிவித்துள்ளார். ஊழலுக்கு எதிராக டில்லி ராம்லீலா மைதானத்தில் உண்ணாவிரதம் இருந்த பாபா ராம்தேவ்வை டில்லி பொலிஸார் அங்கிருந்து அதிரடியாக அப்புறப்படுத்தி ஹரித்துவாரில் உள்ள ராம்தேவின் பதஞ்சலி ஆசிரமத்திற்கு கொண்டு போய் விட்டனர்.

உடனடியாக ஆச்சிரமத்தில் தனது ஆலோசகர்களுடன் 30 நிமிடம் ஆலோசனை நடத்திய பாபா ராம்தேவ் அதன் பின் நிருபர்களை சந்தித்தார்.

பத்திரிகையாளர்களிடம் பாபா ராம்தேவ் கூறியதாவது, டில்லி ராம்லீலா மைதானத்தில் எனது ஆதரவாளர்கள் மீது கட்டவிழ்த்து



விட்ட பொலிஸாரின் அராஜக நடவடிக்கை ஆங்கிலேயே அரசின் ஜாலியன் வாலாபாக் படுகொலையை மிஞ்சிவிட்டது. மத்திய அரசு அவசர நிலையை பிரகடனப்படுத்தியது போல் அப்பாவி மக்கள் மீது பொலிஸ் ஏவி விடப்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரான எனது உண்ணாவிரதம் தொடரும். ஊழலுக்கு எதிரான சத்தியாக்கிரகம் இத்தோடு முடிவடையவில்லை. வீடுவீடாகச் சென்று ஆதரவு திரட்டுவோம். டில்லி அருகிலேயே மீண்டும் உண்ணாவிரதத்தை நடத்துவேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# பாபா ராம்தேவ் வெளியேற்றம் குறித்து மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்று அழைப்பாணை

பாபா ராம்தேவ் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டது பற்றி 2 வாரத்தில் பதில் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.


கறுப்பு பணம், இலஞ்ச ஊழலை எதிர்த்து டில்லி யில் உண்ணாவிரத போராட்டம் நடத்திய பாபா ராம்தேவ் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு ஹரித்துவார் ஆச்சிரமத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அவருடன் உண்ணாவிரதத்தில் பங்கேற்ற அவரது ஆதரவாளர்கள் நள்ளிரவு குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டு டில்லிக்கு வெளியே விடப்பட்டனர். டில்லி அரசின் இந்த நடவடிக்கை பற்றி விசாரிக்க உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து நேற்று விசாரித்தது.

பின்னர் விடுமுறை கால நீதிபதிகள் பி. எஸ்.சவுகான், சுவே டெண்டர்குமார் ஆகியோர் மத்திய உள்துறை அமைச்சகம், டில்லி தலைமை செயலாளர் பொலிஸ் கமிஷனர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளனர்.

ராம்தேவும் அவரது ஆதரவாளர்களும் நள்ளிரவில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதுபற்றி இரண்டு வாரத்துக்குள் பதிலளிக்க வேண்டும் என்று அந்த அழைப்பாணையில் கூறப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையை ஜுலை 2 வாரத்துக்குள் நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (ஸ்ரீ-2)

# பாராளுமன்ற அவசர கூட்டத்தை கூட்டுமாறு அத்வானி வலியுறுத்தல்



(சென்னை)

யோகா குரு பாபா ராம்தேவ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது எடுக்கப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைக்கு பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா ஆகியோர் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். இது உள்ளிட்ட குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதித்த பாராளுமன்ற அவசர கூட்டத்தை கூட்ட வேண்டும் என பா.ஜ.மூத்த தலைவர் அத்வானி வலியுறுத்தினார்.

சென்னையில் நிருபர்களிடம் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது, வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் கறுப்புப் பணத்தை திரும்பக் கொண்டு வரவேண்டும் என 2008 இல் பா.ஜ. வலியுறுத்தியது. இந்த கருத்தை யோகா குரு ராம்தேவ் வரவேற்றதுடன் தன் பல்வேறு கூட்டங்களிலும் இதை வலியுத்தி வந்தார். இதை முன்னெடுத்து செல்லும் விதமாக சத்தியாகிரக வழியில் உண்ணாவிரத போராட்டத்தை டில்லி ராம்லீலா மைதானத்தில் சனிக்கிழமை தொடங்கினார்.

இந்நிலையில் உண்ணாவிரத பந்தலில் இருந்து ராம்தேவை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தியும் அவரது ஆதரவாளர்களை தடியடி நடத்தியும் கண்ணீர் புகை வீசியும் கலைத்துள்ளனர்.

இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ராம்தேவ் மீதான இந்த நடவடிக்கையை கண்டித்து டில்லி ராஜ் நீதிமன்றில் தர்ணா போராட்டம் நடத்த பா.ஜ. திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் அடக்குமுறையை பார்த்தால் நான் அதில் பங்கேற்க முடியுமா என்பதே சந்தேகமாக உள்ளது. இதற்கு பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஐ.மு.கூட்டணியின் தலைவர் சோனியா ஆகியோர் நாட்டு மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கோர வேண்டும். இது குறித்து விவாதிக்க பாராளுமன்ற அவசர கூட்டத் தொடரை ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் கூட்ட வேண்டும். (ஸ்ரீ-2)

# தி.மு.க.விற்கு மாற்றாக ம.தி.மு.க.உருவாகும்

## நாஞ்சில் சம்பத் தெரிவிப்பு

(செங்குன்றம்)

தமிழகத்தில் இனி தி.மு.க. விற்கு மாற்றாக ம.தி.மு.க. செயற்படும் என்று 18 ஆம் ஆண்டு ஆரம்பவிழா பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க.வின் கொள்கை பரப்பு செயலர் நாஞ்சில் சம்பத் புதிய தகவலை தெரிவித்தார்.

சென்னை செங்குன்றத்தில் திருவருள் மாவட்ட இளைஞர் அணி சார்பில் ம.தி.மு.க.வின் 18 ஆம் ஆண்டு ஆரம்ப விழா பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட அக்கட்சியின் கொள்கை பரப்பு செயலர் நாஞ்சில் சம்பத் பேசியதாவது, பொது தேர்தல் என்ற குருஷேத்திரம் முடிந்து ஜெயலலிதா முதல்வராக மகுடம் சூடினார்.

ம.தி.மு.க. விற்கு வயது 18. நாங்கள் இப்போதுதான் பூப்படைந்திருக்கின்றோம். தொண்டர்களின் எழுச்சியால் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கட்சியில் யாரும் பிறந்த நாள் கொண்டாடுவதில்லை. ஆனால் எங்கள் இயக்கதின் பிறந்த நாளை தவறாமல் கொண்டாடுகின்றோம். தமிழகத்தில் பல கட்சிகள் அடையாளமின்றி அழிந்து போய்விட்டன.

தமிழகத்திற்கு வைகோவின் தலைமை தேவை என்பதை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். இந்நிலையில் தி.மு.க.விற்கு மாற்றாக வைகோ தலைமையிலான ம. தி.மு.க. செயற்படும் என்றார். (ஸ்ரீ-2)



அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்றுக்காலை கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. சிவாச்சார்யார்கள் கலசத்திற்கு புனிதநீர் ஊற்றுவதைப் படத்தில் காணலாம்.

உரிமை! அது இல்லாத போது நிலம், நீர், சிறப்பு, செல்வாக்கு ஆகிய எது இருந்தும் என்ன பயன்?
- எமர்சன்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இறப்பெனும் உரிமையை இறைவன் ஏன் வழங்கினான்?

இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள் உலகத் தலைவர்களில் மென்மையானவராக கருதப்பட்ட நல்ல மனிதர்.

அவர் கூறிய தத்துவங்கள் பலவாயினும் 'இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை' என்று கூறிய தத்துவம் எம்மை பொறுத்தவரை மகா தத்துவமாகும்.

பிறக்கின்ற போதே இறக்கின்ற உரிமையும் எழுதப்பட்டு விடுகின்றது. அந்தவகையில் இந்த உலகில் பிறந்த அனைவருக்கும் இறப்பிற்குப் பின்பான சுதந்திரம் உண்டென்று துணிந்து கூறலாம்.

சிலவேளைகளில் மறு உலகிலும் பேரினவாத சிந்தனையுள்ள ஆத்மாக்கள் மற்றும் அடிமைப்பட்ட ஆன்மாக்கள் என்ற வர்க்கப் பிரிப்புக்கள் இருக்குமாயின் யாம் கூறிய மரணத்திற்குப்பின்பான சுதந்திரம் என்பதை வாபஸ் பெற்றாக வேண்டும். எனினும் 'விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர்' என்ற மெய்மையின் அடிப்படையில் இவ்வுலகில் மட்டுமே மனிதப்பிறவிகள் ஒருவரையொருவர் இனத்தால், மதத்தால், மொழியால் அடிபட்டுக் கொள்கின்றனர் என எடுத்துக் கொண்டால்,

நேருவின் தத்துவம் ஈழத்தமிழர்களுக்கு சாலவும் பொருத்துடையது. உதாரணத்திற்கு யாழ்ப்பாண மாநகர சபையை எடுத்துக்கொண்டால் ஆளும் தரப்பும், எதிர்த் தரப்பும் இன்னமும் இணங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு முட்டி மோதுகின்றன.

எத்தனையோ அபிவிருத்தித்திட்டங்கள் செயற்படுத்த வேண்டி இருக்கின்ற போதிலும் அது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. மாறாக தனித்தனி அரசியல் ஆதாயம் தேடும் பணிமட்டுமே நடந்தேறுகின்றது.

அப்படியானால் எப்போது யாழ்ப்பாண மாநகர சபையின் அபிவிருத்தி பற்றி இரு தரப்பும் ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்த போகின்றன.

மாநகர சபைக்கான தேர்தலின் போது பிரிந்து நின்று பிரசாரம் செய்தீர்கள் பரவாயில்லை. ஆனால் தொடர்ந்தும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் மாநகர சபையால் என்ன நன்மை?

யாழ்ப்பாண மாநகர சபை என்பது முழுக்க முழுக்க தமிழ் மக்களுக்கான-தமிழ்மக்களின் பிரதிநிதித்துவத்தை கொண்ட சபை.

இங்கு முஸ்லிம் மக்களையும் நாம் தமிழ் மக்களாகவே பார்க்கின்றோம்.

ஆனால் அந்த சபை யில் நடக்கின்ற சம்பவங்கள் வாக்களித்த மக்களை முட்டாள்களாக ஆக்குவதாக இருக்கின்றன.

இதற்கு அப்பால், தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் தத்தம் அரசியல் லாபத்திற்கான வியூகங்களை அமைப்பதில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இறப்பு என்ற உரிமையும் இல்லை என்றால் தமிழ் மக்களின் நிலை எப்படியிருக்கும்?

ஓ! இறைவா ஈழத்தமிழர்களிடையே நடக்கின்ற அரசியல் கூத்திலிருந்து இந்த உலகை தப்பவைத்துக்கொள்வதற்காகவா இறப்பெனும் உரிமையை சகலருக்கும் வழங்கினாய். வாழி நீ!

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 515 ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 380 ரூபாவாக அதிகரிப்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப் பந்தத்தின் பிரகாரம் இந்த சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் 285 ரூபாவாக இருந்த அடிப்படைச் சம்பளம் 380 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 90 ரூபாவாக இருந்த வருகைக்கேற்ற கொடுப்பனவு 105 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிலையான விலைக் கொடுப்பனவாக நாளாந்தம் 30 ரூபாவை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த மொத்த சம்பளம் 515 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

இந்த புதிய கூட்டு ஒப்பந்தம் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக முதலாளிமார் சம்மேளனத்தின் பெருந்தோட்ட சேவைகள்பிரிவின்தலைவர்லலித் ஒபேசேகர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பகுதிநேர பயிற்சிநெறி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக கணனி மென்பொருள், அழகுக்கலை பயிற்சி நெறிகளுக்கான பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

கற்க ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து 375, கே.கே. எஸ்.வீதி,யாழ்ப்பாணம் அல்லது மின்சார நிலைய வீதி சுன்னாகம் அல்லது வலந்தலைச் சந்தி காரைநகர் அல்லது ஏ-9 வீதி கைதடி ஆகிய பயிற்சிநிலைய பொறுப்பாசிரியர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ)

## போதனாசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையால் மோட்டார் இயந்திர திருத்துனர், குளிரூட்டும் இயந்திரம் வல்லுனர், விவசாய உபகரண திருத்துனர். ஆகிய போதனாசிரியர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மேற்படி பயிற்சி நெறிகள் யாழ். மாவட்டத்தில் விரைவாக ஆரம்பிக்க உள்ளதால் உரிய கல்வி தகைமைகளுடன் 2 வருட அனுபவ சான்றிதழ் உடையவர்கள் இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை 375 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் விண்ணப்பிக்கும் பதவியின் விபரத்தை கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## மாகாண சபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

அரசாங்கம் மாகாண சபைகளுக்கு போதியளவு அதிகாரங்களை வழங்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

13ஆம் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் மாகாணசபைகளுக்கு அரசாங்கம் அதிகாரங்களை வழங்கத் தவறியுள்ளதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

அரசியல் சாசனத்திற்கு உரிய மரியாதை அளிக்காத காரணத்தினால், இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதென கூட்டறிக்கையின் மூலம் உறுதியளித்திருந்தார்.

அரசாங்கம் தொடர்ந்தும் தமது கோரிக்கைகளை நிராகரித்து வந்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதனை தவிர மாற்றும் வழி கிடையாது என மத்திய மாகாணசபை உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் கடந்த மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற 97 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக த.சண்முகலிங்கம்,.உபதலைவர்களாக நா.சோமசுந்தரம், மு.திருஞானசம்பந்தபிள்ளை, செயலாளர் தி.மாணிக்கவாசகர், உதவிச் செயலாளர் ந.குலசிங்கம், மேலதிக உதவிச் செயலாளர் த.சிறிகாந்தன், பொருளாளராக இ.தவகோபால், பரீட்சை செயலாளராக பெர்.கமலநாதன், உதவிப் பரீட்சைச் செயலாளராக த.பாலகிருஷ்ணன், சமயப் பிரசார அமைச்சராக மு.திருஞானசம்பந்தபிள்ளை, உள்ளகக் கணக்காய்வாளர் க.சிவபாதசுந்தரம், கணக்காய்வாளராக அரியரட்ணம் அன்ட் கோ ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (ஸ்ரீ)

## சட்டவிரோத கோடாவை வைத்திருந்த நபருக்கு 68 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கோடாவை தன் வசம் வைத்திருந்த நபருக்கு 68 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சட்ட விரோதமாக மதுபானம் உற்பத்தி செய்யும் உபகரணங்களையும் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 22 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் வடக்கு குப்புலாவத்தை பகுதியிலிருந்தே இந்த நபரை பொலிஸார் கடந்த 4ஆம் திகதி கைது செய்தனர்.

இவர்தன் வசம் 1456 கிராம் கோடாவை வைத்திருந்தார். கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். குறித்த வழக்கை விசாரித்த யாழ். மாவட்ட நீதிபதியும் நீதிவான் நீதி மன்ற மேலதிக நீதவானுமான அ.பிறேம்சங்கர் குற்றவாளிக்கு 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் 48 மாதம் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### உண்மையான மகிழ்ச்சி

உங்கள் தவறுகளைப் பெரும் பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையல்ல.அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது. தன்ன லத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன் னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது. கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய்விடும். ஆனால்,அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான். மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான். கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

# அரச சேவையாளர்களின் வேதன உயர்வு தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

ஓய்வூதியம் தொடர்பாக செலுத்தப்படும் கவனத்தை அரச சேவையாளர்களின் வேதனவுயர்வு தொடர்பில் அரசாங்கம் செலுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கிய வேதனவுயர்வு உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்று காரண மாகவே குறித்த வேதனவுயர்வை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அரச செலவுகளை அதிகரிக்கப் போவதில்லை என தற்போதைய அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே, அரச செலவுகளில் ஒரு பகுதியாக அரச பணிகளில் ஈடுபடுவோரின் வேதனத்தை உயர்த்தாமல் அசமந்த போக்குடன் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் மின்சார கட்டணவுயர்வு போன்றே எரிபொருள் விலைகளும் அதிகரித்துச் செல்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களே காரணமாக அமைந்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் துறையினருக்கு முறையான வகையில் அனுகூலம் தரக் கூடிய ஓய்வூதியத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உடனடியாகக் கொண்டு வரவேணடும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சேவையாளர்களிடம் கருத்துக்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது ஜே.வி.பிஇயின் பிரதான செயலாளர்ரில்வின் இந்த விடயங்களை குறிப்பிட் டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# காணாமற் போனவர்களுக்கான கவனயீர்ப்பு போராட்டம்

காணாமற் போனோரை தேடியறியும் குழுவினால் நாளை புதன்கிழமை காலை11 மணிக்கு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இப்போராட்டத்தில் காணமற் போனவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தி நீண்ட காலமாக துயரத்தில் வாழ்ந்து வரும் மக்களின் கண்ணீரைத் துடைக்க அனைவரையும் அணிதிரளுமாறு அக்குழுவின் செயலாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இராணுவ அடக்குமுறையை கொண்ட குடும்ப ஆட்சியை நோக்கி இலங்கை நகர்கிறது

## மனித உரிமை ஆர்வலர் நிமல்கா பெர்னாண்டோ விமர்சனம்

(கொழும்பு)

இராணுவ அடக்குமுறையைக் கொண்ட குடும்ப ஆட்சியொன்றை நோக்கி இலங்கை படிப்படியாக நகர்ந்து கொண்டிருடிருப்பதாக மனித உரிமை ஆர்வலர் சட்டத்தரணி நிமல்கா பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னான இலங்கையில் எங்கு பார்த்தாலும் இராணுவ மயமாக்கலே தீவிரம் பெற்றுக் காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சிவராம் நினைவுதின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஊடக சுதந்திரம் என்பது தற்போதுஅடியோடு இல்லை. எங்கு பார்த்தாலும் இராணுவத் தலைலீடுதான் அதிகமாகக் காணப்படுகின்றது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் விடயத்திலும் இராணுவ நிகழ்ச்சி நிரலே மேலோங்கிக் காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் தோல்வியுற்ற ஜனநாயகக் கட்டமைப்பிலிருந்து குடும்ப ஆட்சிமுறையொன்றை நோக்கி நாடு படிப்படியாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. சட்டம், ஒழுங்கு என்பதெல்லாம் என்னவென்று கேட்கும் அளவுக்கு சீர்குலைந்து போயுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட சிவராம் மட்டுமல்ல பாதிப்புகளை எதிர்கொண்ட எந்தவொரு ஊடகவியலாளர்களுக்கும் எதுவிதமான நிவாரணங்களோ சட்டரீதியான உதவிகள் மற்றும் பாதுகாப்போ வழங்கப்படவில்லை. அதன் காரணமாக இன்றைக்கும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவே செய்கின்றனர் என்றும் அவர் தனது நினைவுரையின் போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# செங்குந்தா சந்தையில் பழுதடைந்த மீன் அழிப்பு

செங்குந்தா சந்தையில் மீன் விற்பனை செய்யப்படும் பகுதியில் மனித பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்பட்ட 22 கிலோகிராம் மீன் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் கடந்த 2 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக யாழ். மாநாகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 6 மாதங்களுக்கு தேவையான எரிபொருள் இறக்குமதி

(கொழும்பு)

ஆறு மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை ஒரே முறையாக இலங்கைக்கு வழங்க ஐக்கிய அரபு இராஜ்ஜியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் இலங்கையும் ஐக்கிய அரபு இராஜ்ஜியமும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த புதிய ஒப்பந்தத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு தேவையான 36 இலட்சம் டீசல் பீப்பாய்கள் எமிரேசில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதனால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படக்கூடிய 20 கோடி ரூபா விரயம் தவிர்க்கப்படுவதாக எரிபொருள் தொழிற்துறை அமைச்சின் செயலாளர் டைட்டஸ் ஜயவர்த்தன தெரிவித்தார்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் தயாரிக்கும் எரிபொருளின் அளவு நாட்டின் உள்ளூர் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவில் இல்லாத காரணத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்த தேவைக்காக தனியார் கம்பனிகளிடம் இருந்தும் எரிபொருளை விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்விதம் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தனியார் வர்த்தகர்களிடம் இருந்து எரிபொருளை வாங்கியதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெருமளவு நஷ்டமடைந்தது என்றும் இதனால் மக்களுக்கு கிடைக்கவிருந்த நன்மைகளும் இல்லாமற்போய் விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஓய்வூதியத்திட்டம் வாபஸ் பெறப்பட்டமை அரசின் பின்னடைவாக கருதப்பட வேண்டும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

தனியார்துறை ஓய்வூதியத்திட்டம் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டமை ஊழியர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும் என ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

ஓய்வூதியத் திட்டம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டமை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அடைந்த பின்னடைவாக கருதப்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசங்கத்தின் பின்னடைவு ஆரம்பமாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பெரும்பான்மை ஆதரவினை இழந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என அரசாங்கம் பெருமிதம் பேசிக் கொண்ட போதிலும் திட்டமிட்ட முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டால் அரசாங்கத்தை அடிபணிய வைக்க முடியும் என்பது இந்தப் போராட்டத்தின் மூலம் புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போராட்டத்திற்கு தனியார் ஊடகங்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஈகோலி பக்டீரியாவினால் இலங்கைக்கு பாதிப்பில்லை

ஜேர்மனி உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகளில் பரவிவரும் ஈ கோலி பக்டீரியாவினால் இலங்கைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இந்த பக்டீரியா நாட்டுக்குள் பரவுவதை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குமார டி சில்வா கூறியுள்ளார்.


உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே கால்நடைகள், கால்நடை உற்பத்திகள் மற்றும் கால்நடைகளுக்கான உணவு வகைகளை நாட்டுக்குள் கொண்டு வர அனுமதிக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும் ஈ கோலி பக்டீரியா பரவியுள்ள நாடுகளில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கால்நடை மற்றும் சுகாதாரத் திணைக்களம் கூறியுள்ளது.

பறவைக் காய்ச்சல் அல்லது வேறு நோய் அச்சுறுத்தல்கள் காணப்படும் நாடுகளில் இருந்து கால்நடை உற்பத்திகளை இறக்குமதி செய்யக் கூடாது என்ற நிலைப்பாட்டில் சுகாதார அமைச்சு இருப்பதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)





சுண்டுக்குளியில் இயங்கும் இராயகுலேந்திரன்நினைவுமேலைத்தேய இசைப் பேச்சு மற்றும் நாடகவியல் மன்றத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிகள் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிராணி மில்ஸ் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அகில இலங்கை ரீதியில் மேலைத்தேய இசைப் போட்டியில் முதலாம் இடத்தை வென்று வெற்றிக்கிண்ணம் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கைத் தமிழர்களை தனியாக விட்டுவிடுங்கள்

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிபுக்குவந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆயினும் யுத்தத்தின் பிடியிலிருந்து நகர்ந்து செல்வதற்கு நாடு தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறது. போர்க் குற்றச்சாட்டுக்கள் இன்னமும் தொடர்கிறது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து எவ்வித சமிக்ஞைகளும் இன்னமும் தெரியவில்லை.

இவ்வாறு இலங்கைத் தமிழர்களை தனியாக விட்டுவிடுங்கள் என்ற தலைப்பில் இந்தியாவிலிருந்து வெளியாகும் தெஹெல்கா ஊடகம் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிபுகள் வெளியான பின்னர் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அளித்த செவ்வியில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுத்த இந்தியா முயலவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இரு வருடத்திற்கு முன்னர் இடம் பெற்ற யுத்தத்தில் இலங்கைத் தமிழர்கள் சகலவற்றையும் இழந்திருந்தனர். போர் முடிபடைந்து இன்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இன்று குண்டுகள் இல்லை. போரினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனர். ஆனாலும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து இதைவிட மேலாக சர்வதேசம் எதிர்பார்க்கிறது.

நீண்டகாலமாக நடைமுறையிலிருந்து வரும் அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டிய விடயத்திற்கு அரசு முன்னுரிமை கொடுக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்போரின் எண்ணிக்கை குறித்து சரியான தகவல் இல்லை.

யுத்தத்தில் காணாமற்போன குடும்ப உறுப்பினர்களைத் தேடித் தருமாறு நல்லிணக்க ஆணைக்குழுவிடம் மக்கள் கோரிக்கை விட்டுள்ளனர். இந்த விடயம் இலங்கைத் தமிழர்களின் பாரிய கவலையாக இருந்து வருகிறது.

இலங்கை–இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்ட வடமாகாண சபையானது இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை. விரைவில் தேர்தலை நடத்தவிரும்புவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளபோதிலும் கடந்த இரு வருடங்களாகத் தேர்தல் இடம் பெறவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்த போதிலும் ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கும் 18–வது திருத்தம் மட்டும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் நம்பகரமான போர்க்குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு விசாரணை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

மேற்குலக அரசாங்கங்கள் அந்தத்திசையில் மெதுவாக நகர்ந்து செல்கின்றன. வெளிநாட்டு அழுத்தத்தை உள்நாட்டில் தனது அரசாங்கத்திற்கு ஆதரவாக திருப்புவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிபுணராக உள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது தேவையாகவுள்ளது அவர்களைத் தனியாகவிட்டுவிடுவது ஆகும் என இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மின்சார சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் புதிய தலை வராக அணுசக்தி அதிகார சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் விமலதர்மராம அபயவிக்கிரம மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் செயற்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபைப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னைய பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக நேற்று மாலை புதியவர்கள் நியமிக்கப்பட்டதாகவும் இலங்கை மின்சாரபைப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச)

# கிளி.பாடசாலை மாணவர்களுக்கு பொருளியல் பாட கருத்தரங்கு

(கிளிநொச்சி)

க.பொ.த. உயர் தரத்தில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் பொருளியல் பாடத்தைக் கற்று இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் முகமாக பரீட்சைத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட முன்னோடி வினாத்தாள் பரீட்சை கடந்த சனிக்கிழமை (04.06.2011) பாடசாலைகளில் நடைபெற்றது. இவ்வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்தியக் கல்லூரியிலும், கிளிநொச்சி மகாவித்தியாலத்திலும் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரி நிலையத்திற்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி, பூநகரி மகாவித்தியாலயம், இராமநாத புரம் மகாவித்தியாலம், அக்கராஜன் மகாவித்தியாலயம், கனகபுரம் மகாவித்தியாலயம், திருவையாறு மகாவித்தியாலயம், தருமபுரம் மகாவித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகிய பாட்சாலை மாணவர்களையும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, புனித திரேஸா பெண்கள் கல்லூரி, வட்டக்கச்சி மகாவித்தியாலயம், முருகானந்தா மகாவித்தியாலயம், உருத்திரபுர மகாவித்தியாலயம், பளைமத்தியகல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார். (ச)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலும் வாக்களிக்கும் முறையும்

23.07.2011 திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் எப்படி வாக்களிப்பது என்பது சிலருக்கு தெளிவும் பலருக்கு தெளிவின்மையும் காணப்படுவதை பல்வேறு தரப்பினரும் என்னோடு உரையாடுவதிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

முதலில் உள்ளூராட்சி சபையொன்றின் வாக்குச்சீட்டொன்று எப்படி அமைந்திருக்கும் என்ற மாதிரியை தெரிந்துகொள்வதன் மூலம் வாக்களிப்பு முறையை புரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போல் அல்லாது ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்காகவும் வெவ்வேறுவாக்குச்சீட்டுகள் காணப்படும்.

| கட்சி/ சுயேச்சைக் குழுக்களின் பெயர்கள் | | | | சின்னம் | |
|---|---|---|---|---|---|
| | | | | X | |
| | | | | + | |
| | | | | * | |
| | | | | V | |
| 1 | | | 7 | | |
| 2 | | | 8 | | |
| 3 | | | 9 | | |
| 4 | | | 10 | | |
| 5 | | | 11 | | |
| 6 | | | 12 | | |

முதலில் வாக்காளர் ஒருவர் வாக்குச்சீட்டில் அதற்குரிய இடத்தில் தாம் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவிற்கு வாக்களித்தல் வேண்டும். கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு வாக்களிக்காது விடும் இடத்தோ உரியமுறையில் வாக்களிக்கத் தவறுமிடத்தோ அவ்வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படும்.

அடுத்ததாக தமது விருப்பு வாக்கை பிரயோகித்தல் வேண்டும். விருப்பு வாக்கை பிரயோகிக்கும்போது இலக்கத்திற்கு மேலும் X புள்ளடி இடல்வேண்டும். விருப்பு வாக்கை பிரயோகிக்காத வாக்குச்சீட்டு கட்சிக்கான கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால் விருப்புவாக்கு கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

விருப்பு வாக்குகள் ஒருவருக்கு மூன்று உள்ளது. மூன்றையும் பாவிக்கலாம். இரண்டையும் பாவிக்கலாம், ஒன்றையும் பாவிக்கலாம். அதேபோல் தாம் விரும்பிய ஒருவருக்கு மூன்று வாக்கையும் பிரயோகிக்கலாம். மூன்று வாக்குகளையும் பிரித்து வெவ்வேறு வேட்பாளர்களுக்கும் பிரயோகிக்கலாம்.

மூன்றுக்கு மேல் பிரயோகிக்கும் இடத் தோ அல்லது தவறாக பிரயோகிக்கும் இட்த்தோ கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

விருப்பு வாக்குகள் கணிப்பின்போது மூன்று வாக்குகளும் ஒருவருக்கே பிரயோகிக்கப்பட்டிருந்தால் மூன்று வாக்குகள் சேர்க்கப்படும். பிரித்து பிரயோகித்திருந்தால் அத்தொகை அல்லது தொகைகள் அவ்வேட்பாளரது விருப்பு வாக்குத்தொகையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**தலைவர் /உப தலைவர் /அங்கத்தவர்கள் தெரிவு முறை**

ஒவ்வொரு உள்ளூர் அதிகாரசபை தொடர்பாகவும் மேற்படி தலைவர், உப தலைவர், அங்கத்தவர்கள் தெரிவு கணிப்பீடு நடைபெறும். முதலில் ஒவ்வொரு சபைக்கும் கட்சிகள் சுயேட்சைக்குழுக்கள் பெற்ற வாக்குத் தொகைகள் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற அங்கத்துவம் பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

அவ் உள்ளூர் அதிகார சபைக்காக நிராகரிக்கப்பட்ட வாக்குகள் நீக்கப்பட்டு செல்லுபடியான மொத்த வாக்குத்தொகையில் (சகல கட்சிகள் குழுக்கள் பெற்றதொகை) அவ் அதிகார சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர் தொகையிலிருந்து இரண்டைக் கழித்து (போனஸ் அங்கத்தவர் தொகை) மிகுதித் தொகையால் பிரிக்கப்படும். இவ்வாறு பிரித்துவரும் தொகை விளைவு எண் (Resulting Number) எனப்படும்.

ஒவ்வொரு கட்சியும் பெற்ற தொகைகள் மேற்படி விளைவு எண்ணால் (Resulting Number) பிரிக்கும் போது ஒவ்வொரு கட்சியும் பெறும் அங்கத்தவர்கள் தொகை கிடைக்கும்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் சகல கட்சிகளின் அங்கத்தவர்களின் கூட்டுத்தொகையானது அச்சபைக்கு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர் தொகையிலிருந்து இரண்டைக் கழித்துவரும்தொகைக்கு (போனஸ்அங்கத்தவர்) சமமானால்அங்கத்தவர்கணிப்புநிறைவுபெறும். குறைவாக வருமிடத்து அங்கத்துவம் பெற்ற கட்சிகளின் மிகுதித் தொகைகளும் அதாவது கட்சி பெற்ற மொத்தத் தொகையிலிருந்து விளைவு எண்ணை (Resulting Number) அங்கத்தவர் தொகையால் பெருக்கி வரும் தொகையை கழித்து வரும் தொகையும், அங்கத்துவம் பெற்றிராத கட்சிகள் குழுக்களின் தொகையும் மிகுதி வாக்குகளாக கருதப்படும். இதில் துக்கட்சிக்கு அல்லது குழுவிற்கு மிகுதி அங்கத்துவம் உரித்தாகின்றது

இரண்டு போனஸ் அங்கத்துவம் அவ் உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் அதிகூடிய வாக்குகள் பெற்ற கட்சிக்கு குழுவுக்கு உரித்தாகின்றது. மேற்படி அதிகூடிய வாக்குகள் பெற்ற கட்சியின் செயலாளருக்கு அவ்வுள்ளூர் அதிகார சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அக்கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் பெயர் விபரங்களையும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் விபரங்களையும் அறிவித்து இவர்களில் தலைவர் / உபதலைவராக தெரிவு செய்யப்பட வேண்டியவர்களுடைய பெயர்களை அறிவிக்குமாறு கோருவர்.

கட்சியின் செயலாளரது பதில் கிடைத்தவுடன் செயலாளர் குறிப்பிட்டவர்களை தலைவர் /உப தலைவர் சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல் ஆணையாளரூடாக வர்த்தமானியில் வெளியிட்டு இந்நியமனங்களை அறிவிப்பார்.

**ஏ.எஸ்.கருணாநிதி,**
**தேர்தல்கள்உதவிஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# அரச உத்தியோகத்தர்களை பகடைக்காய் ஆக்காதீர்கள்!

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல் இலாபங்களுக்காக அரச உத்தியோகத்தர்களை பகடைக் காய்கள் ஆக்கக் கூடாது என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தெல்லிப்பழையில் நடைபெற்ற மீள் குடியமர்ந்த மக்களுடனான சந்திப்பில் அரச உயர்மட்ட அதிகாரிகள் அரசின் ஆலவட்டங்களாக உள்ளனர் என த.தே.கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

அரச ஊழியர்கள், அரசு பணிக்கும் வேலைகளைச் செய்வதற்கே நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் மக்களுக்கான சேவைகளையே செய்து வருகின்றனர். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரச உயர் அதிகாரிகள் அரசின் ஆலவட்டங்களா? எனக் கேட்டுள்ளார். அத்துடன் அக்கூட்டத்திற்கு அரச அதிபரோ தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரோ அங்கு சமுகமளிக்கவில்லை எனவும் கூறியுள்ளனர்.

இக் கூட்டம் தொடர்பாக எமக்கு எந்தவொரு அறிவிப்புக்களும் கிடைக்கவில்லை. அரசியல் கட்சிகள் நடத்தும் கூட்டத்திற்கு நாங்கள் செல்ல முடியாது. அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்காகக் கூட இக் கூட்டத்தினை பயன்படுத்தியிருக்கலாம்.

ஜனாதிபதியின் வருகைக்காக மக்களை அழைத்துச் செல்லும் ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்ததால் நான் அக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என சுரேஷ் எம்.பி. குற்றஞ் சாட்டியிருந்தார். ஆனால் அவ்வாறான கூட்டம் எதிலும் நான் கலந்துகொள்ளவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் நான் எனது தனிப்பட்ட வேலைகளிலேயே ஈடுபட்டேன். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தினம் என்பதால் எவரும் எந்தவகையிலும் என்னைக் குற்றஞ்சாட்ட முடியாது. மக்களை மீள் குடியமரச்செய்யும் வேலைகளில் நானே அதிகம் ஈடுபட்டேன். அவர்கள் மீது எனக்கும் அக்கறை உண்டு அவ்விடத்தில் என்னை எவரும் குற்றஞ் சாட்ட முடியாது.

தயவுசெய்து அரசியல் இலாபத்திற்காக அரச உத்தியோகத்தர்களை பகடைக்காய்களாக ஆக்கிவிடாதீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஏ)

## தடையை நீக்...

போதும் வழக்கில் புலிகள் சார்பாக வாதாடுவதற்கு கொப்பேக்கு சட்டத்தரணி அதிகாரம் லக்சம்போர்க் நீதிமன்றால் வழங்கப்படவேண்டும் என்பதால் அதன் விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தற்போது சட்டத்தரணி அதிகாரம் கிடைத்துள்ளதை அடுத்து, விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ் வழக்கு தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை நாடுகளையும் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலையும் நீதிமன்றுக்கு அழைத்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்பது நீதிமன்றினை பொறுத்த விடயம் என வழக்கறிஞர் கொப்பே கூறியுள்ளார்.

இந்த வழக்கு சாதகமான முடிபைக் கொண்டுவந்தால், தமிழ் புலம்பெயர்வாளர்கள் சுதந்திரமான, சமாதானமான, ஜனநாயகசெயற்பாடுகளைத் தமது நாடுகளில் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என சர்வதேச ஊடகங்கள்செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ)

## சூழ்ச்சியாளர்களுக்கு...

ஆரியரத்ன எதுகல கையொப்பமிட்டு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு, மக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரச்சினை சகல தொழிலாளர்களினதும் பிரச்சினை என்றால் அவை தொடர்பில் கலந்துரையாடி அதன் மூலமாக தீர்வுகாண முடியும். அதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் பெற்றுக்கொடுத்துள்ளது. பிரச்சினை யைத் தீர்த்துக்கொள்வதற்காக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அல்லது வேலை நிறுத்தங்களை மேற்கொள்வது அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தேர்தல்களில் மக்கள் ஆணையைப் பெற்றார். அதிகாரத்தை பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பைச் சேர்ந்தோரை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களுக்குரிய துறைக்குத் தேவையான ஒதுக்கீடுகள் செய்வதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் மிக வேகமாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தியை சீர்குலைப்பதற்கு ஜே.வி.பி. முயற்சிக்கின்றமை தெளிவாகின்றது.

நாட்டிலிருந்து எந்தவொரு துறைத்தொடர்பிலும் இருக்கின்ற கொள்கை மற்றும் தொழில் தொடர்பில் உண்மையான பிரச்சினையை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் எந்த நேரமும் தயாராகவே இருக்கின்றது. அதற்காக அலரி மாளிகையின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்பதால் எதிர்காலத்தில் இவ்வாறான சூழ்ச்சிகள் தொடர்பில் எச்சரிக்கை மற்றும் சிந்தனையுடனும் இருக்குமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

## பொன்சேகா வழக்கை...

பாரிஸ்டருமான மார்க் ட்ரொவல் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

இவரை பிரதி சொலிஸ்டர் ஜெனரல் புவனேக அலுவிஹார, சரத் பொன்சேகாவின் வழக்கறிஞர் நளின் லத்துவஹெட்டிக்கு அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் மார்க் ட்ரொவல், சரத் பொன்சேகாவுடனும் அவரது மனைவியுடனும் பேசினார். பின்னர் ட்ரொவல் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, டிரான் அலஸ், ஜயந்த கெற்றகொட ஆகியோருடன் பேசினார்.

மார்க் ட்ரொவல் சர்வதேச பிரபலம் பெற்ற பல வழக்குகளை நேரில் அவதானித்துள்ளார். வெள்ளைக் கொடி வழக்கு விசாரணையை நேரில் அவதானிப்பதற்காக இவரை அனைத்து நாடாளுமன்ற சங்கம் அனுப்பி வைத்துள்ளது என பத்திரிகையாளர்களுக்கு ட்ரொவலை அறிமுகம் செய்து வைத்த டிரான் அலஸ் கூறினார்.

## நாட்டை இராணுவ ஆட்சி...

இருந்தமை இறந்தவரை அவமரியாதை செய்யும் செயல் எனவும் பாக்பர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கைக்கு பாரிய அவமரியாதையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடும் அவர், இலங்கையின் நற்பெயருக்கு அவமரியாதை ஏற்படுத்தப்பட்டுள்ளமை இந்த அரசாங்கத்திற்கு புரியவில்லையா என்றும் கேள்வி எழுப்பினார்.

எமது நாட்டில் மனித உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பாக அரசாங்கம் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் இவ்வாறு செயற்படுகின்றமை நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், நாட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் அவரின் இறுதிக்கிரியைகளுக்கான நடவடிக்கைகளை இராணுவத்தினரா? முன்னெடுக்கின்றனர் என மக்கள் கேள்வி எழுப்பும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஏ)

## ஜனாதிபதி செய்ய முடியாத...

ஜனாதிபதி கூறிய ஒரே நாடு ஒரே இனம் என்ற கருத்தை இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியிலேயே ஆட்சிசெய்த தலைவர்கள் கூறியிருப்பார்களேயானால் எமது அகராதியில் சில வசனங்கள் இல்லாது இருந்திருக்கும். பயங்கரவாதிகள், புனர்வாழ்வு நிலையங்கள், குண்டுகள், ஷெல்கள் என்ற வார்த்தைகளே எமது அகராதியில் இல்லாது போயிருக்கும்.

எமது ஜனாதிபதியிடம் விஷேட தன்மைகள உள்ளன. எந்தச் செயற்பாட்டை எடுத்துக்கொண்டாலும் அந்தச் செயற்பாட்டை உணர்வுபூர்வமாகவும் சிறந்த முறையிலும் செய்யவேண்டும் எனவிரும்புவார். ஆனால் ஒரு விடயத்தை தான் செய்வார் அல்லது உறவினர்களிடம் அந்தப் பொறுப்பை வழங்குவார். இந்த வகையிலேயே வடமாகாணத்திலிருந்து பயங்கரவாதத்தை ஒழிக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷவிடம் பொறுப்பைக் கொடுத்தார். அதன் பின்னர் அப் பகுதியை அபிவிருத்தி செய்யுமாறு பசில் ராஜபக்ஷவிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் மனித உயிர்களுக்கு மதிப்பளிக்கவேண்டும் எனக் கூறுகின்றன. 30 வருடங்களுக்குப் பின்னர் இன்று இலங்கையில் வாழும் மக்களின் வாழ்க்கைக்கு பெறுமானம் கிடைத்துள்ளது. அதற்கு நல்ல உதாரணம் தான் கட்டுநாயக்காவில் இடம்பெற்ற ஒரு மரணம். இந்த நாட்டைச் சேர்ந்த எல்லோரும் இது பற்றி எந்தளவு பேசினார்கள். இந்த ஒரு நாடு ஒருவரது மரணத்தைப் பற்றி எந்தளவு அதிர்ச்சியடைந்துள்ளது.

இரண்டு வருடத்திற்கு முதல இந்த நாட்டில் என்ன நிலையிருந்தது. நாய்களைப்போல் நூற்றுக்கணக்கில் மரணங்களைச் சந்தித்த நாடு. கிரிக்கெட் ஓட்டத்தை அறிவதுபோல் எத்தனை குண்டுகள் வெடித்தன, எத்தனைபேர் செத்தனர் என்று கேட்டுக்கொண்டிருந்தோம்.

30 வருடங்களாக மரணத்தோடும், இரத்தத்தோடும், சதைகளோடும் வாழ்ந்தவர்கள் நாம். உங்களது பாதுகாப்பை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று அரச தலைவர்கள் கூறினார்கள். அன்று நாம் திகதியிடப்படாத மரணச்சான்றிதழை சட்டைப்பைக்குள் கொண்டுசென்றோம். வவுனியாவிலிருந்து கொண்டு மேலைத்தேய நாடுகளுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தொகை தொகையாக மரணங்கள் நடந்த இந்த நாடு ஒரு மரணத்தில் எவ்வாறு அதிர்ந்து போயுள்ளதென்பதை பார்க்குமாறு கூறுகிறேன். அது இந்த நாட்டு மக்களினுடைய மனிதநேயம். கௌரவம் என்று அவர் தனதுரையில் கூறியுள்ளார். (ச)

## வடக்கு அரசியல்...

அவர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடக்கிலுள்ள இளைஞர்களை தெற்கிலுள்ளவர்கள் சந்தேகத்தில் நோக்கிய காலம் இருந்தது. சுமார் 25 வருடங்களுக்கு அதிகமாக இந்த நிலை காணப்பட்டது. எனினும் தற்போது அந்நிலை மாறியிருக்கிறது. இந்நிலையை நாம் மாற்றியமைத்துள்ளோம்.

வடக்கிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எமது நோக்கமாகும். அதனை நிறைவேற்றுவதற்கு பல வழிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

விடுதலைப்புலிகள் அன்று எம்மிடம் கேட்டதை இன்று பலர் எம்மிடம் கேட்க முயற்சிக்கின்றார்கள். அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை வழங்கத் தயாரில்லை.

### புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி சவால்

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் என வெளிநாடுகளில் இருந்தவாறு கூச்சலிடும் புலம்பெயர் தமிழர்களில் ஒருவரேனும் தமிழ் மக்களின் நலனுக்காக ஒரு டொலரைக் கூட அன்பளிப்புச் செய்ததில்லை.

அவர்களுக்கு கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் எல்லாம் வீடுகள் உண்டு. ஐரோப்பா, கனடா, அமெரிக்காவிலும் கூட வீடுகள் உண்டு.

அவர்கள் ஆங்கிலம் பேசி தமக்கான நிதிகளைத் சேகரித்துக் கொள்கின்றனர். இவர்களில் பலர் தமிழில் பேசுவதில்லை. என க்குத் தெரிந்த தமிழ் கூட அவர்களில் பலருக்கு தெரியாது. ஆனா[illegible] அவர்கள் தங்களுக்கான நிதி சேகரிப்பில் மிகவும் திறமைசாலிகள்.

எவ்வாறாயினும் புலம்பெயர்ந்த தமிழர்களால் சேகரிக்கப்படும் நிதிகள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு உதவ பயன்படுத்தப்படுவதில்லை.

ஆனால் தமிழர்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய பிழையான தகவல்களையும், பொய்யையும் பரப்பவே அந்த நிதியை பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் மறைந்துபோன தமது ஈழக் கோரிக்கையை மீண்டும் தோண்டியெடுக்க முயற்சிசெய்கின்றனர்.

ஆனால் இலங்கைத் தமிழ் மக்கள் இவர்களின் கபட நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ளும் அளவுக்கு விவேகம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறினார்.

கொக்காவில் தொலைத்தொடர்புக் கோபுரம் நேற்று ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது. இக் கோபுரம் 174 மீற்றர் உயரத்தில் பிரமாண்டமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் 400 மில்லியன் ரூபாய் நிதி இதற்கென செலவிடப்பட்டுள்ளது.

ரூபவாஹினி, சுயாதீனத் தொலைக்காட்சி உள்ளிட்ட அரச தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி மற்றும் அரச வானொலிச் சேவைகள் ஆகியவற்றிக்கு தனித் தனிப் பிரிவுகள் இக் கோபுரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

BAIRAHA ESTD:1975
இலங்கையில் 35 வருடங்களுக்கு மேலாக
HALAAL உட்பட அனைத்து தரச்சான்றிதழ்களையும்
பெற்று கோழி இறைச்சி உற்பத்தியில்
முன்னிலையிலுள்ள BAIRAHA
கோழி இறைச்சியினை
வேண்டிய நிறைகளிலும் தேவைக்கேற்ற
அளவுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
வடபகுதிக்கான ஏக விநியோகத்தர்கள்
TESCO DISTRIBUTOR'S
# 171, பலாலி வீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0214925849
ஹொட்லைன்:- 0776961866
0773535561
Halaal - Sri Lanka
HACCP

A/L ? Pass / Fail
CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe
SMS your name & course to 772395895 & Get Schol.
Government Scholarship.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 11.06.2011
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.